1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு தை மாதம் 31-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 4-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### புதியஅரசாங்க காரியாலயம்

யாழ்ப்பாணத்திலே நவீனவசதிகளைக்கொண்ட அரசாங்க மத்தியகாரியாலயம் ஒன்றைஅமைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. இதுவிஷயமாய் அறிக்கைஒன்று சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண அரசாங்கதலைவரை அரசாங்கம் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### சுதேசமகிமைப்பட்டங்கள்

இலங்கைப்பிரசைகளில் எவருக்குமே அரசாங்கம் சுதேசமகிமைப்பட்டங்களோ, அன்றேல் சாம்பிராச்சிய மகிமைப்பட்டங்களோ வழங்கமாட்டாதென்று பிரதமர்பண்டாரநாயகா அறிவித்திருக்கின்றார். எக்ஸத் பிக்கு பெரமுனையின் தலைவர்களில்ஒருவரான பம்பரந்த ஸ்ரீசீவாலிதெரோ என்னும் புத்தகுருவுக்குப் பிரதமர்எழுதியுள்ள கடிதம்ஒன்றில் அரசாங்கம் எவருக்குமே மகிமைப்பட்டங்கள் வழங்காதெனத் தெரிவித்திருக்கின்றார்.

### சிங்களம் நிறுத்தப்பட்டது

மட்டக்களப்பு, ம[illegible]யகல்லூரியில் படிக்கும்மாணவர்களின் பெற்றோர் கேட்டுக்கொண்டதின்பேரிலே அக்கல்லூரியில் சிங்களம்படிப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் அக்கல்லூரியின் பாடநேரஅட்டவணை தற்போதுமுற்றாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. சிங்களபாடம் கற்பிப்பதற்குச் செய்யப்பட்டிருந்த ஒழுங்குமுறைகளும் கைவிடப்பட்டிருக்கின்றன. அங்கே சிங்களம்படிப்பித்துவந்த மூன்றுசிங்களஆசிரியர்களும் வெளியேற்றப்பட்டு விட்டார்கள்.

### மூதூர் எம். பி. நிராகரித்தார்

சுதந்திரதின கொண்டாட்டங்களிலே கலந்துகொள்ளும்படியாகத் தமக்கு அனுப்பிவைக்கப்பட்ட அழைப்புகள்பலவற்றை மூதூர்ப்பிரதிநிதி ஜனாப் எம். பி. ஈ. எச். முகம்மதலிஅவர்கள் நிராகரித்துவிட்டார். நாட்டின் ஒருபகுதியினர் பாகுபாடுகளுடன் நடத்தப்படும்போது இப்படியானகொண்டாட்டங்களில், தன்மானமுள்ளஎவருமே கலந்துகொள்ளமுடியாதென அவர்தெரிவித்திருக்கிறார். சென்றவருடம் இந்தக்கொண்டாட்டங்களிலே இவர் கலந்துகொள்ளவில்லை.

### பாப்பரசர் குருமடத்தலைவர்

தற்போது பூன[illegible]ரில் இருந்துவருகின்ற பாப்பரசர்குருமடத்தின் புதிய தலைவராக யேசுசபையைச்சேர்ந்த வண. லோறென்ஸ் பெர்னண்டெஸ் சுவாமியார் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். முன்புஇவர் திருச்சினப்பளியிலே யேசுசபையாருக்குச் சேர்ந்த சஞ்சூசையப்பர்கல்லூரி அதிபராயிருந்தார்.

### மூன்றுமொழிகளிலும் அழைப்பு

இலங்கைச் சுதந்திரதினம்அன்று "ரெம்பிள் றீஸ்" மனையில் நடத்தப்படவிருக்கும் வரவேற்புக்குப் பிரதமர் பண்டாரநாயகா விடுக்கவிருக்கும் அழைப்புப்பத்திரங்கள் ஆங்கிலம், சிங்களம், தமிழாகிய மூன்றுமொழிகளிலும் இருக்கும். அவற்றிலே ஒருபகுதியான 'காட்டு'கள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும், மறுபகுதியான 'காட்டு'கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் இருக்கும். பாராளுமன்ற அரசாங்க கட்சியிலுள்ள தமிழ், முஸ்லீம் பிரதிநிதிகளுக்குச் சிங்கள—ஆங்கில அழைப்புக் 'காட்டு'கள் அனுப்பிவைக்கப்படுமாம்.

### இந்நாட்டின் இருகண்கள்

"இந்திய தோட்டத்தொழிலாளர்கள்தான் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கே அடிப்படையானவர்கள்; இந்தநாட்டினை இயக்குபவர்களே இவர்களென்றாலுங்கூடக் குற்றமில்லை; இவர்கள் நாட்டின் நிலத்திற்கும், தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்குமாக இத்தீவின் ஏனையதொழிலாளர்களோடு இணைந்துபோராடுவது அவசியம்; தமிழரும், சிங்களவரும் இந்நாட்டின் இருகண்கள்" என்று கடதொரப்பிட்டிய பஞ்ஞாசரதெரோ எனும் புத்தபிக்கு அன்று நம்பொடையில் நிகழ்ந்த பொங்கல்விழாவில் கூறியிருக்கின்றார்.

### பிக்குபெரமுனை அச்சுறுத்துகிறது

சிங்களஸ்ரீஎதிர்ப்பு இயக்கத்தை எதிர்த்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்பதென "எக்ஸத் பிக்கு பெரமுனை" என்ற பிக்குகளின் ஐக்கிய முன்னணி சென்றஞாயிற்றுக்கிழமை தீர்மானித்திருக்கிறது. அரசாங்கம் நடவடிக்கைஎடாது போகுமானால் தானேநடவடிக்கை எடுத்துக்கொள்வதென இந்தப்பிக்குகள் முன்னணி முடிவுசெய்திருக்கிறது. இதுவிஷயமாகப் பிரதமரைச் சந்திப்பதென்றும், அவரிடமிருந்து திருப்திகரமானபதில் கிடையாமற்போகுமிடத்துத் தானே நடவடிக்கைஎடுப்பதென்றும் இப்பெரமுனையின் நிர்வாகசபை தீர்மானித்துள்ளது.

### மன்னாரில் தண்ணீர்க்கட்டுப்பாடு

மன்னார்ப்பட்டினத்திலே குழாய் மூலம் உதவப்படும் குடிதண்ணீரை உதவுவதானது சென்றவாரமுதல் மணிக்கணக்கிலே கட்டுமட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன்விளைவாக மக்கள் குடிதண்ணீருக்குத் தட்டுப்பட்டுக் கஷ்டப்படுகிறார்கள். வண்டிகள்மூலம் கொண்டுவரப்படும் குடிதண்ணீரை ஒருகுடம்25சதமாகவாங்கித் தங்கள் தேவையைப் பலரும்பூர்த்திசெய்கின்றார்கள். குழாய்மூலம் குடிதண்ணீர் வரும் கிணறுகளில் போதியதண்ணீர் இருந்தும் திடீரெனக் குழாய்நீரைக் கட்டுமட்டுப்படுத்தியமை நியாயமற்ற செயலெனப் பொதுமக்கள் முறையீடு செய்திருக்கிறார்கள்.

### மட்டக்களப்பும் சுதந்திரதினமும்

மட்டக்களப்புப்பகுதியில் அடங்கியுள்ள பத்துக்காரியாதிகாரிகளின் பிரிவுகளில் மூன்றில்மட்டுமே சுதந்திரதினக் கொண்டாட்டம் நடைபெறவிருக்கிறது. மட்டக்களப்பு அரசாங்கதலைவர் தமதுஎல்லைக்குள் கடமையாற்றும் காரியாதிகாரிகளுக்கு எழுதியகடிதம் ஒன்றிலே மக்களின் ஆதரவிருந்தால் சுதந்திரதினக்கொண்டாட்டம்நடத்தப்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். சிங்களவர்கள் அதிகமாகவாழும் வேக்கம்பற்று, விந்தனைப்பற்று, பாணமப்பற்று ஆகியமூன்றினதும் காரியாதிகாரிகளே தங்கள்பிரிவுகளில் சுதந்திரதினம் கொண்டாடப்படுமெனத் தெரிவித்திருக்கிறார்கள்.

### தம்பதேனியாப் பிரதிநிதி

தற்போது வர்த்தகமந்திரியாய் இருந்துவருகின்ற திரு. ஆர். ஜி. சேனநாயக இரண்டுதோணிகளில் கால் வைத்தவர்போன்று களனித்தொகுதிக்கும், தம்பதேனியாத்தொகுதிக்கும் ஒருங்கேபிரதிநிதியாய் இருந்துவருகிறார். அன்று தம்பதேனியாவில் நடைபெற்ற கூட்டம்ஒன்றிலே, திரு. ஆர். ஜி. சேனநாயகா தம்பதேனியாவுக்கு அதிகம்வருவதில்லை; அவரைக்கண்டுபேச அங்கேஅவருக்கு ஓர் காரியாலயம்இல்லை; தம்பதேனியா வாக்காளர்கள் அவர்மீது படிப்படியாக நம்பிக்கைஇழந்து வருகிறார்கள்; அன்புடன்அழைப்பு அனுப்பப்பட்டிருந்தும அங்குநடைபெற்ற கலை, கைப்பணிப்பொருட்காட்சியை அவர்முற்றாகப் புறக்கணித்துவிட்டார்; அப்பொருட்காட்சியைநடத்த அவர்ஒத்துழைக்கவில்லை; தம்பதேனியா மக்கள்மீது அவர்பாராமுகமாக நடந்துகொள்வதையிட்டு அவரிடம் மக்கள் விளக்கங்கேட்கவேண்டும் என்பனவாகப் பலரும்பேசினார்கள்.

### புதிய சுதேசவைத்தியகல்லூரி

அரசாங்க சுதேசவைத்தியசபைத் தலைவர்பதவியைச் சென்றவாரம் இராசினாமாச்செய்துள்ள மாலெவன ஞானிசாரமகாதேரோஎன்ற புத்தகுரு இவ்வருடமுடிவுக்குள் கொழும்பிலே தனிப்பட்டமுறையில் ஓர்சுதேசவைத்தியகல்லூரியை ஸ்தாபிக்கவிருக்கின்றார். அரசாங்க சுதேசவைத்திய கல்லூரியின் தலைவராயிருந்து சென்றவாரம் தமதுபதவியை இராசினாமாச் செய்துள்ளவரான டக்றர் ஆர். பி. லெனேரோ புதியசுதேசவைத்தியகல்லூரியின் தலைவராயிருப்பார். புதியகல்லூரியுடன் சுதேசவைத்திய ஆஸ்பத்திரி ஒன்றும் அமைக்கப்படும்.

### அரசாங்கம் கைப்பற்றுமா?

சிங்களஸ்ரீ சட்டமறுப்பு இயக்கத்தைஎதிர்த்துக் கடுமையானநடவடிக்கை எடுக்கும்விஷயமாய் அரசாங்கம் ஆலோசனைசெய்துவருகின்றது. சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்மீது வழக்குத்தொடர்வது நல்லதல்ல; அரசாங்ககொள்கையுடன் இணக்கிநடக்க அவர்களைத் தூண்டவேண்டுமென்று பொலிஸ்அதிகாரிகளும், மற்றும்ஆலோசகர்களும் பிரதமருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்எழுத்துக்கார்களைப் பொலிசார் கைப்பற்றி வைத்திருக்கவேண்டும்; அந்தக்கார்களின் சொந்தக்காரர் அந்த எழுத்துகளைப் பழையபடி மாற்ற இணங்கும்வரை கார்களைத்திருப்பிக் கொடுக்கக் கூடாதென்றும் பிரதமருக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளதாம்.

### ஆங்கிலத்தில் வரவேற்புப்பத்திரம்

செஞ்சீனப்பிரதமர் சூ—என்—லாய் இலங்கைக்கு விஜயஞ்செய்யும்போது, கொழும்புநகரசபை அவருக்குச் சிங்களத்தில் வரவேற்புப்பத்திரம் வாசித்தளிக்கவேண்டுமென்று அச்சபைஅங்கத்தவர்ஒருவர் செய்தவேண்டுகோளைக் கொழும்புநகர்மேயர் வி. ஏ. சுகததாசா நிராகரித்து விடலாயினர். நகரசபையில் சிறுபான்மைச் சமூகத்தினரின் அங்கத்தவர்களும் இருக்கின்றனர்; சிங்களத்தில்மாத்திரம் வரவேற்புப்பத்திரத்தை வாசித்தளித்தால் அவர்கள்மனதைப் புண்படுத்துவதாகிவிடும்; அதனால்நகரிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தினரிடையே மனத்தாங்கல்கள் ஏற்படாதிருக்கும்படி செய்வதற்காக ஆங்கிலத்தைஉபயோகிக்கத் தீர்மானித்திருக்கிறேன்என்று மேயர் பதில்அளித்திருக்கின்றார். சிங்களத்தில் 'வரவேற்புப்பத்திரம் வாசிக்கப்படாவிடின் வரவேற்பைப் பகிஷ்கரிக்கப் போவதாக நகரசபையிலுள்ள எம். ஈ. பி. கட்சியைச்சேர்ந்த அங்கத்தவர்கள் பயமுறுத்தியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உன்விருப்பப்படி நீ ......"

முகம்மறையும் அந்திப்பொழுது. தள்ளாடிக்கொண்டே நடந்தான் ஒரு 19 வயது வாலிபன். பகல் முழுவதும் அவன் பட்டினிகிடந்தாலும் அவன் முகத்தில் ஒருபொலிவு காணப்பட்டது. அவன் பட்டினிகிடக்கவில்லை. அது அவன்மேற்கொண்ட முழுநாள்உபவாசம். உண்ணுமல் வீட்டில் உட்கார்ந்திருந்தால், அப்பாவின்கேள்விகளுக்கு அவனுல் பதில்சொல்ல முடிந்திருக்காது. எனவே, பூசைமுடிந்ததும் புறப்பட்டஅவன் தண்ணீரைமட்டும் பருகிவிட்டு நடந்துகொண்டிருந்தான்.

மாலை நெருங்கநெருங்க யோசேப் களைப்பினுல் நடக்கமுடியாமல் தவித்தான். எதிரே காணப்பட்டது வண்டல்மேடுஎன்ற கிராமம். இன்னும் அரைமைல் தூரம்தான். பன்னிரண்டுமைல் நடந்துவந்த அவனுக்கு இந்தஅரைமைல்தூரமும் அறுபது மைல்போல் தோன்றிற்று. அத்தனை பசியும், களைப்பும்.

கீழ்வானத்தில் நிலா எழுந்தது. யோசேப்பின்கால்கள் நடக்க மறுத்தன. கண்மங்கிற்று. விழிகள்சுழன்றன. குளிரினுல் உடல் உதறலெடுத்தது. காலில்இடறிய ஒரு மரத்தின் வேர் அவனை நிலத்தில் சாய்த்தது. நல்லவேளை அதுமணற்பூமி. காயம் ஏற்படவில்லை. மயக்கமுற்றுன் யோசேப்.

மறுபடியும் யோசேப் கண்களைத் திறந்தபோது, தான் ஒருகட்டிலில் படுத்திருப்பதாக உணர்ந்தான். "என்னதம்பி! நீயார்?" என்ற பரிவான குரல் ஒன்றுகேட்டது. அப்போதுதான் தான் கால்இடறி மயங்கி விழுந்ததும், இப்பொழுது ஒருமுஸ்லீம்வீட்டில் ஆதரவு பெற்றிருப்பதும் அவனுக்குப் புலனுயிற்று. தன்னை அறியாமலே சட்டைப்பையிலிருந்த செபமாலையைக் கையில் எடுத்துக்கொண்டான் அயன். "தண்ணீர்" என்று ஹீனக்குரலில் கேட்டான். அவனைச் சாப்பிடச்சொல்லி எவ்வளவோ கேட்டுக்கொண்டார் அந்தமுஸ்லீம். தனது முழுநாள் உபவாசத்தை நினைத்துக்கொண்டயோசேப் கண்டிப்பாக அதைமறுத்துவிட்டுத் தண்ணீரை மட்டும் பருகியபின் சோர்வுமிகுதியால் படுக்கையில் துவண்டுவிட்டான். அந்த முஸ்லீம்கேட்ட எத்தனையோ கேள்விகளுக்குப்பதிலாகத் தன்பெயரைமட்டும் கூறிவிட்டு, "நன்றிஐயா" என்று சொல்லிப் படுத்துக்கொண்டான்.

அரைமணி நேரத்தின்பின் ஏதோ அவசரமாக வெளியூர்போயிருந்த மைதீன் வந்துசேர்ந்தான். தன்கட்டிலில் ஒருபுதுஆளைக் கண்டதும், "அப்பா! இதுயார்?" என்று கேட்டபடி அருகேசென்றுன். அது தன் வகுப்புத்தோழன்போல் இருக்கக் கண்டு, "இது யோசேப் மாதிரியல்லவா இருக்கிறது" என்றுன். அவரும் ஆச்சரியத்துடன், "ஆமாம் மைதீன், தன்பெயரை அப்படித்தான் கூறினுன் இந்தப்பையன்; வேறுஎதுவும் கூறமறுத்துவிட்டான்; பரிதாபமாக மயங்கிக்கிடந்தவனைத் தூக்கிக்கொண்டு வந்து சேர்த்தேன்; அந்தச்செபமாலையைவைத்து அவன் உருட்டிக்கொண்டிருக்கப் பார்த்தேன் சற்று நேரம்; அப்புறம் தூங்கிவிட்டான்; எழுப்பாதே; எல்லாம் நாளைக்குத் தெரிந்துவிடும்" என்று கூறினர் அந்த ஈகையுள்ளங்கொண்ட முஸ்லீம்.

ஆருலதுபாரப் பரீட்சைஎழுதிவிட்டு முடிவுக்காகக் காத்திருப்பவன்தான் யோசேப். வீட்டில் ஒரேபிள்ளை. ஆயினும், கட்டுப்பாடான நல்லகத்தோலிக்க குடும்பமாதலால அவன் பக்தியில் வளர்க்கப்பட்டான். யோசேப்பிற்கு எப்போதுமே குருவாக வேண்டும்என்ற ஆசை. ஆனுல், அதைத் தனது தந்தையிடம் கூறியபோதுதான் வானமேஇடிந்து தன்தலையில் விழுந்ததுபோல் தோன்றியது அவனுக்கு. அவன் தந்தைடேவிட் அவனுக்கு அனுமதியளிக்க மறுத்தார். அவரும் எவ்வளவோ பக்தியாக இருந்தாலும் தனது ஒரேமகனும் தன்னைவிட்டுப் போய்விடுவான்என்று அறிந்ததும் அவர்மனம் வேதனைப்பட்டது தந்தையின்பாசம் கடவுளுடைய உரிமையை மறுத்தது. அவருடைய உத்தரவைப் பெறுவதற்காகத்தான் யோசேப் தேவதாய்க்கு ஒருநவநாள்தொடக்கி, அதன் இறுதித் தினத்தில் முழுநாள் உபவாசம் மேற்கொண்டான்.

**குரு இன்னொரு கிறிஸ்து**



"சீவியர்களுக்காகவும், மரித்தவர்களுக்காகவும் பூசை நிறைவேற்றும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளும்."

மறுநாள் "என்னடா யோசேப்! செபமாலையும்கையுமாக யாத்திரை கிளம்பியிருக்கிறுய்? எழுந்திரு; இந்தக் காப்பியைக்குடி, களைப்புத் தீரட்டும்" என்ற மைதீனின் குரலைக்கேட்ட யோசேப் ஆச்சரியத்தால் வாயடைத்துப்போனுன். எப்படியோ தனது நண்பன்வீட்டில் இருப்பதுபற்றி அவனுக்கு மிகுந்தமகிழ்ச்சி. எழுந்து களைப்பாறியபின் தனது விரதத்தின் முழுவரலாற்றையும்கூறினுன்யோசேப். மைதீனுக்குத் தனது நண்பன்விஷயத்தில் எப்படியும் உதவிசெய்ய வேண்டுமென்ற ஆவல்பிறந்தது.

* * *

"இந்தாங்க, யோசேப் வண்டல் மேட்டிலுள்ள என் தமக்கைவீட்டுக்குப் போகிறேனென்று நேற்றுக்காலை சொல்லிப்போனவன் பகல் பன்னிரண்டுமணியாகியும் இன்னும் காணவில்லையே" என்று அங்கலாய்த்தாள் யோசேப்பின் தாயார். "பொறு, வருவான்" என்றுர் டேவிட், ஏதோஒரு புத்தகத்தைப் புரட்டிக்கொண்டே. அப்பொழுதுதான் அந்தத் துயரச் செய்தியுடன் அங்குவந்து சேர்ந்தான் மைதீன். தனது நண்பனுக்காக அழுதுஅழுது அவன்முகம் சிவந்திருந்தது. காற்றுவேகத்திற் தனதுசைக்கிளில் அங்குவந்தவன் மூச்சுவாங்கிக்கொண்டே கண்ணீருடன "ஐயா!... யோசேப்... உங்கள்மகன்..." என்று மேலேசொல்லமுடியாமல் தவித்தான். யோசேப்பின்பெற்றேர் கவலையின்உருவங்களாக மாறினர்.

"தம்பி! என்னசொல்கிறுய்?" என்று குரல்நடுங்கக் கேட்டார் டேவிட். மைதீனுக்குப் பேச வார்த்தை வரவில்லை. அவன் அழுகை அதிகமாயிற்று. டேவிட் விஷயத்தைஅறியத் துடிதுடித்தார். "ஐயா! யோசேப் ஒரு லொறி..." என்பதற்குமேல் அவனுல் பேசமுடியவில்லை. டேவிட் உடனே யூகித்துக்கொண்டார் விஷயத்தை. அவர் ஒன்றும் பேசவில்லை. அழுவுமில்லை. அப்படியே உட்கார்ந்துவிட்டார். நீண்டஓர் பெருமூச்சுவிட்டார்.

யோசேப்பின் தாயாரது அழுகையும், ஒப்பாரியும் அக்கம்பக்கத்தாரையெல்லாம் அங்கே அழைத்துவிட்டன. கேவிக்கேவி அவள்அழுதாள். விபத்து நிகழ்ந்த இடத்துக்குப்போக டேவிட் எழுந்திருக்கத்தானும் இல்லை. "ஐயோ! என்பிள்ளை சுவாமியாகப் போகவேண்டுமென்றதற்கு விட்டோமில்லையே; அப்பா, நீ இபபோது எங்களை விட்டுவிட்டே போய்விட்டாயே" என்று அழுதுஅரற்றினுள் பெற்றதாய்.

"ஆம், அவனைக் கடவுள்அழைத்தார். நான் மறுத்தேன். இப்பொழுது அவர் கட்டாயமாக அவனை எடுத்துக்கொண்டார். இப்படித்தெரிந்திருக்குமானுல் அவனை அப்பொழுதே போக அனுமதித்திருப்பேன்" என்றுர் டேவிட். மைதீனின் அழுகை நின்றது. "ஐயா! நீங்கள் சொல்வது உண்மைதானு?" மைதீனின் குரலில் ஆர்வம் தொனித்தது.

"ஆம், என்மகன் இப்படிஇறப்பதிலும் இறைவனுக்கு ஊழியம்செய்வது எவ்வளவோமேல்" என்றுர் டேவிட்.

"அப்படியானுல் யோசேப் ஒருவேளை பிழைத்துக்கொண்டால் அவனைக் குருமடத்துக்கு அனுப்பச் சம்மதிப்பீர்களா?" என்று கேட்டான் மைதீன் திரும்பவும்.

"நிச்சயமாக" என்ற டேவிட்டின் குரலில் இப்பொழுது ஏனோ உறுதி தொனித்தது.

"ஐயா! தங்களின் இந்தவாக்கைக் காப்பாற்றுங்கள்; இதோ உங்கள் மகன்யோசேப் உயிரோடேயே இருக்கிறுன்" என்றுகூறியமைதீன் தன் சைக்கிளில் வெளியே விரைந்தான். ஐந்துநிமிஷத்தில் ஊரின் தெருக்கோடியில் ஒளித்துநின்ற யோசேப்பைத் தன் பின்னுல் ஏற்றிக்கொண்டு வந்துசேர்ந்தான். டேவிட் மகனைத் தழுவிக்கொண்டார். "உன் விருப்பப்படி நீ குருவாகப்போ" என்று ஆசிகூறிவிட்டு மைதீனைப்பார்த்தார். எல்லோருமே மைதீனைப் பார்த்தார்கள். "நண்பனுக்காகத்தான் இதை நடித்தேன்; மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றுன் மைதீன். யோசேப்பின் கண்கள் மைதீனைப்பார்த்து நன்றியால் நிறைந்தன.

— ஞானதூதன்

## போளவத்தைத் தபால்

**25-ம் வருட யூபிலிவிழா:**

போளவத்தை விசாரணைப்பங்கின் கட்டளைக்குருவாக இருந்துவரும் வண. யு. கிளமென்ட் பர்னுண்டோ சுவாமியவர்களின் குருத்துவ வெள்ளி யூபிலிவிழா எதிரேவரும் மாசிமாதம் 20-ந் திகதி வருவதால் அதைமுன்னிட்டுப் போளவத்தை, கைமல், கோனுவில், கொடல்லை ஆதியாமிடங்களிலுள்ள ஆலயங்களின் கட்டளைக்காரர், அணுணுவிமாரைக் கொண்டதோர் பொதுக்கூட்டமொன்று அதிவண. பசில் பொன்சேக்கா சுவாமியவர்கள்தலைமையில் நடந்தேறியிருக்கிறது.

**ஆசிரியகலாசாலைப் பிரவேசவகுப்பு:**

தமிழ் ஆசிரியகலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்குரிய வகுப்பொன்று முதன் முதலாக இவ்வருடம் தமிழ்ஆண்பாடசாலைத் தலைமையாசிரியர் உட்பட ஆசிரியர் றேமண்டுஸ், எபிசேயுஸ் ஆகியோரால் நடத்தப்பட்டுவருகிறது. வகுப்பில் தற்போது இரு ஆண்களும், ஐந்துபெண்களும் பயின்றுவருகிறுர்கள். இன்னும் பலமாணவர் மாணவிகள் இதில்சேருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

**நாட்பூசைப் போட்டி:**

போளவத்தை, "சம்மனசுகளின் இராக்கினி"யின் தமிழ்ப்பாலர் பிரசீடியத்தாரால் நடாத்தப்பட்ட நாட்பூசைப் போட்டியின் பரிசுவழங்கும் விழா சென்ற 27-1-57 ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் தமிழ்ஆண்பாடசாலை மண்டபத்தில் வண. கட்டளைக்குரவர் தலைமையில் நடந்தேறியது. முதலாவதாகப் பாலர்பிரசீடியத்தலைவர் ஸ்ரானிசோசாவால் பூசைப்போட்டி தொடக்கப்பட்டதன் நோக்கம், மாணவர் கடைப்பிடிக்கவேண்டிய முறை என்பனபற்றி விளக்கிக்கூறப்பட்டது. சிங்கள ஆண்பாடசாலையும் போட்டியில் பங்குபற்றிய காரணமாகச் சிங்கள பாஷையில் சலாபத் தமிழ்க்கியூறியாச் செயலாளர் பீற்றர் நொலஸ்கோவால் ஓர்உபந்நியாசம் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து வண. கட்டளைக்குரவரால் பரிசுகள் வழங்கப்பட்டன. லீனுஸ், செபஸ்தியான், எலோஜியுஸ் ஆகிய மாணவர்கள் 1-ம் பரிசாக மூன்று வெற்றிகளைப் பெற்றுக்கொண்டனர். இன்னும் முறையே மொத்தமாகத் தமிழ், சிங்களம்ஆகிய இருபாடசாலைகளுக்கும் 15 பரிசுகள் வழங்கப்பட்டன. இதனைஅடுத்துக் கட்டளைக்குரவரின் பேச்சு இடம்பெற்றது. அதில் முதலாவதாக அவரால் போட்டியை ஆரம்பித்த பாலர்பிரசீடியத்தலைவருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் பூசைப்பலியின் மகத்துவம்பற்றியும் விளக்கிக்கூறப்பட்டது. அதன்பின் சமுகமளித்திருந்தயாவருக்கும் இனிப்புப்பண்டங்கள் வழங்கப்பட்டு, நன்றியுரைகூறியதும் கட்டளைக்குரவரின் ஆசீருடன் விழாமுடிவுற்றது.

— நிருபர்

சங். அல்போன்சா கன்னியாஸ்திரியின் கல்லறை இருந்துவருகின்ற பாரனன்கானத்திலே வைத்திய மிஷன் கன்னியாஸ்திரிமாரால் இந்தியாவில் எட்டாவதாகக் கட்டப்பெற்றுள்ள ஆஸ்பத்திரிக்கு உதவியாய் இந்தியஅரசாங்கம் 2,000 பவுண்வரையிலே உபகரித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

—:—

### பாப்பரசரும் பண்டிதநேருவும்

ஐக்கியஅமெரிக்க தேசத்திலும், பிரித்தானியிலும் தம்முடையதரிசனை முடித்துக்கொண்டு இந்திய பிரதமர் பண்டிதநேருஅவர்கள் சமீபத்திலே ரோமைநகர் வழியாகத் திரும்புகையில், பரிசுத்தபிதா ஒலிபரப்பிய கிறிஸ்மஸ்செய்தியைப்பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்களென்று அவரைக் கேட்டபோது: ''பத்திரிகைகளிலே பாப்பரசரின்செய்தியைத் தாம்படித்ததாகவும், அவருடைய சொற்பொழிவு உலகசமாதானத்தை ஓங்கச்செய்வதற்கு முக்கியமான ஓர்பங்குத்தானமென்று தாம்கருதியதாகவும் அவர் தெரிவித்தார்.

### கருதினால் எழுதும் நூல்

ஹங்கேரியிலே அமெரிக்கஸ்தானிகராலயத்தில் அடைக்கலம் புகுந்து தங்கியிருக்கும் கருதினால் மின்ட்சென்றிஆண்டவர் தமது கடந்தகால அனுபவத்தைப்பற்றி நூல்ஒன்று எழுதி வருகின்றார். ஆனால், அவர் விடுதலையடையும்வரை அல்லது மரிக்கும்வரை அந்த நூலைப்பிரசுரிக்க அமெரிக்கர் அனுமதிதர மாட்டார்களாம். ஹங்கேரிய காடார்அரசாங்கம் வற்புறுத்திப் பயமுறுத்திக்கேட்டால், அமெரிக்கர் கருதினாலாண்டவரைக்கையளித்துவிடுவார்கள் என்றஅச்சம் தோன்றியுள்ளது. நாட்டைவிட்டு அவர்தப்பிவெளியேறவும் அனுமதியும், வாய்ப்பும் கிட்டாது. வெளியேறமுயன்றால் கைதுசெய்யப்படுவார். கடுஞ்சிறைத்தண்டனை கிடைக்குமென்றும் காடார்அரசாங்கம் மிரட்டியுள்ளது.

### ரூஷியாவின் மனந்திரும்புதல்

உலகசமாதானத்துக்குத் திறவுகோலாகக்கருதப்படுகின்ற ரூஷியாவின் மனந்திரும்புதலானது முன்னர் எக்காலத்திலும்பார்க்க இப்போது அதிகம்நெருங்கியிருப்பதாகக் கருதினால்மார்திருச்சங்கதலைவரான கருதினால் திசரான் ஆண்டவர் கூறுகின்றார். இதற்குக்காரணம், சமயத்தை அடக்கியொடுக்கிவிடுமாறுசெய்யப்பட்ட கம்யூனிஸ்தர்களின் தந்திரசூழ்ச்சிகளெல்லாம் அவர்களுக்கே கெடுதியாகத் திரும்பியிருப்பதேயாகுமென்று அவர் எண்ணுகின்றார். ஐக்கியஅமெரிக்கதேச நீலப்படைச்சஞ்சிகைக்கு அவர்எழுதியுள்ள கட்டுரைஒன்றிலே, ''சைபீரியாவிலுள்ள சுரங்கங்களில் வேலைசெய்யுமாறு பலவந்தமாக மேற்றிராணிமாரையும், குருமாரையும் அனுப்பிவைத்தமைபோன்ற அவர்களின் நடவடிக்கைகள் திருச்சபையை அதிகஞ்சிறந்தவகையிலே அங்கு பிறர் அறிந்துகொள்ளச் செய்வதான பெருஞ்சேவையை ஆற்றியிருக்கின்றன; இந்தவிதமாகச் சமயத்தில் அற்பசொற்ப அறிவுடனோ அன்றேல் சமயமென்பதே இல்லாமலோ சைபீரியா முகாங்களில் இருந்துவந்த அநேகாயிரக்கணக்கானகைதிகள் அங்கு சிறைவைக்கப்பட்டிருந்த மேற்றிராணிமார், குருமாருடன் நெருக்கமாகப்புழங்கித் திருச்சபையைப்பற்றிய அதிகஞ்சிறந்தவிளக்கத்தை அடைந்திருக்கிறார்கள்''எனத் தெரிவித்திருக்கிறார்.

### ஹங்கேரியும் சமயகல்வியும்

தங்கள்பாடசாலைகளிலே சமயகல்வி போதிக்கவேண்டுமென்று மத்தியபாடசாலைகள், இலக்கணபாடசாலைகளின் முகாமைக்காரர் சகலருக்கும் ஹங்கேரிய கல்விமந்திரிகாரியாலயம் அறிவித்திருக்கிறது. பாடசாலைப்பூசைகள் கிரமமாக நிறைவேறிவர வேண்டுமென்று கியோவர்நகரின் பாப் மேற்றிராணியார் கற்பித்துப் பாடசாலைகளிலே சமயகல்வி போதிக்கப்படுவதைக் கண்காணிக்குமாறுகுருமாரையும், சாதாரணகத்தோலிக்கரையும் ஏற்கனவே நியமனஞ்செய்திருக்கிறாரென வீயென்னாநகரிலிருந்து அறிவிக்கப்படுகிறது. சமயகல்விசம்பந்தமாய்த் தங்கள்பணியின் காத்திரத்தை ஆசிரியர்களுக்கெல்லாம் அழுத்தமாக அவர்எடுத்துக்கூறி, அரசியல் வட்டாரங்களிலிருந்து என்னதான்நெருக்கிடைகள் வந்தபோதிலும் பரவாயில்லை; எந்த வகையிலும் திருச்சபைப்போதனைகளை மாற்றப்படாதென அறிவுறுத்தியிருக்கின்றார்.

### விடுதலையடைந்த மேற்றிராணியார்

ரெல்சியாய்நகரின் துணைமேற்றிராணியாரான பிரான்சிஸ் றமனோஸ்காஸ்ஆண்டவரும், மற்றும் லிதுவானியகுருமார் 102 பேரும் சைபீரிய சிறைமுகாங்களிலிருந்து விடுதலைசெய்யப் பட்டிருப்பதாக ரூஷியா தெரிவித்திருக்கின்றது. ஆயினும்இவர்கள் அறியப்படாத இடங்களிலே வீடுகளில் சிறைவைக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் தங்கள்பிரயாணத்தில் ஏற்பட்டகளைப்பு நீங்குகிறவரையிலே ஆரோக்கியசாலைகளில்வைத்துப் பரிகரிக்கப்பட வேண்டியிருக்குங்காரணமாக உடனுக்குடனே தங்கள் சுயநாட்டுக்குத் திரும்பவும் செல்லமுடியாதென்று கம்யூனிஸ்தபொலிசர் தெரிவித்திருக்கின்றனர். றமனோஸ்காஸ்மேற்றிராணியார் இற்றைக்குப் பத்து வருடங்களின்முன் கைதுசெய்யப்பட்டிருந்தார். ஏனைய 102 குருமாரிலும் அதிகமானோர் இரண்டு அல்லது மூன்றுவருடகாலமாகச் சைபீரியாவில் இருந்துவந்தார்கள். நாடுகடத்தப்பட்ட தங்கள் மேற்றிராணியாரையும், குருமாரையும் திரும்பத் தருவிக்க வேண்டுமென்று லிதுவானிய நாட்டுக் கத்தோலிக்கமக்கள் பிடிவாதமாகக் கேட்டுக்கொண்டு வந்தமையாலேயே அவர்கள் விடுதலை செய்யப் பெற்றிருக்கிறார்கள். ரூஷியபடைகள் 1940-ம்ஆண்டு ஆனிமாதம் லிதுவானியா, லாத்வியா, எஸ்தோனியாஆகிய பால்திக்நாடுகளில் உள்ளிடத்தைத் தொடர்ந்து சிறிது காலத்துள் அம்மூன்றுநாடுகளும் ரூஷியாவுடன் சேர்க்கப்படலாயின. அப்போது லிதுவானியாவுக்கு ஓர் அரசியல்திட்டம் அருளப்பட்டது. அதன்படி லிதுவானியமக்கள் தங்கள் சமயத்தைஅனுசரிக்கச் சுதந்திரம் அருளப்பட்டது. ஆனால், திருச்சபையைஎதிர்த்து வேலை செய்ய வேதவிரோதிகளுக்கும் சுதந்திரம் அருளப்படலாயிற்று.




''எங்களுடைய சீவியத்தில் உமது இரட்சணியத்தின் பலனை அனுபவிக்கும் பொருட்டு...''

கிறீஸ்துவின் பாடுகளின் பலன்களைப் பகிர்ந்து கொடுக்கிறார் குரு.

### சங். அல்போன்சா கன்னியாஸ்திரி

பாரனன்கானம் எனுமிடத்திலே இற்றைக்குப் பத்துவருடங்களின்முன்னரே தனது 36-ம்வயதில் பரமபதமடைந்த சங். அல்போன்சா என்ற இந்தியகன்னியாஸ்திரிக்கு விரைவிலே முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுமாறு கேட்டு ஐந்து இந்திய எம். பி. கள் பரிசுத்தபிதாவுக்கு மனுப்பண்ணியிருக்கிறார்கள். இதேமாதிரியான மனுஒன்றை இருவருடங்களின் முன் இந்தியமேற்றிராணிமாரும், அதிமேற்றிராணிமாரும் பரிசுத்தஸ்தானத்துக்குச் சமர்ப்பித்திருந்தார்கள். இந்த எம். பி. களில் பாரனங்கானத்தையும் உள்ளடக்கியதொகுதியின் பிரதிநிதியான திரு. தோமஸ் கெற்றுகாப்பிள்ளை அவர்களும் ஒருவராவர். இந்தியாவிலுள்ள 35 கோடிமக்களினதும் ஞானவளர்ச்சியைமுன்னிட்டுச் சங். அல்போன்சாகன்னியாஸ்திரிக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுமாறு இவரும், ஏனையநால்வரும் கேட்டிருக்கின்றார்கள். செல்வம்செல்வாக்குள்ள ஓர்குடும்பத்தைச் சேர்ந்த சங். அல்போன்சாகன்னியாஸ்திரியின் சீவியவரலாறு இந்தியாவின் முக்கியபாஷைகளில் ஏறக்குறைய எல்லாவற்றிலுமே மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது. அவ்வாறே அநேகஐரோப்பிய பாஷைகளிலுமாகும். அவள்கல்லறையைத் தரிசித்திருப்பவர்களில் கருதினால்மாரும், அதிமேற்றிராணிமார் மேற்றிராணிமாரும், மந்திரிமாரும், இராஜாக்களும் அடங்கியுள்ளார்கள். அல்போன்சா கன்னியாஸ்திரியைப் பலிபீடங்களின் வணக்கத்துக்கு உயர்த்துவதைப்போல இந்தியாவிலே கிறீஸ்து வேதத்தின் உண்மையைப் பரப்புவதற்குச் சமீபகாலங்களிலே மற்றெந்தநடவடிக்கையும் உதவமாட்டாதென்று முன்சொன்ன எம். பி. கள் ஐவரும் தங்கள்மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசிமாதம்

**பொதுக்கருத்து:** குருத்துவஅழைத்தலை விருத்திசெய்யும் ஸ்தாபனங்களுக்கு விசுவாசிகள்உதவிசெய்யுமாறு வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** வடஆபிரிக்காவிலே திருச்சபைசெயலாற்ற அமைதியானசூழ்நிலைஏற்படுமாறு மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்
1957-ம் ஆண்டு
தை மாதம் 31-ந் திகதி

## சுதந்திர ஞாபகதினம்

நமதுசெல்வநாடாகிய ஸ்ரீலங்கா சுதந்திரம்பெற்ற ஞாபகதினம் மற்றுமோர்தரம் சுழன்றுகொண்டு அடுத்த மாசி4-ந் திகதியாகிய வருகிறதிங்கட்கிழமை வருகின்றது. இந்தச்சுதந்திரம் இலங்கையிலுள்ள ஒரேயொருசாகியத்தாரின் ஒத்துழைப்பாலும், ஒரேயொருசமயத்தாரின் உடன்முயற்சியாலுமே கிடைத்ததன்று. ஆனால், இங்குவாழும் சிங்களர், தமிழர், முஸ்லீம்கள், பேர்க்கர் ஆதியாம் சகலசாகியத்தினரதும், பௌத்தர்கள், இந்துக்கள், கிறீஸ்துவர்கள், முஸ்லீம்கள்ஆதியாம் சகலசமயத்தினரதும் ஒத்துழைப்பாலும், உடன்முயற்சியாலுமே கிட்டியதொன்றாகும். அதனால் அரசியற்சுதந்திரமாகிய இந்த அரிய சுதந்திரத்தை ஈட்டிக்கொண்டபோது ஒரேதாய்வயிற்றில்பிறந்தபிள்ளைகளைப்போன்று சாகிய,சமய பேதம்பாராது இலங்கைமக்கள் அனைவருமே குதுகலித்தார்கள். சுதந்திரவிழாவை ஏகமனதாய்க் கொண்டாடினார்கள். இனியென்ன! அரசியற்சுதந்திரம்அடைந்துவிட்டோம்; அடுத்தபடியாக நாடு சுபீட்சமடையும்படியாய்ப் பொருளாதாரசுதந்திரத்தை நமதுசுய முயற்சியால் ஈட்டிக்கொள்வோம்; அதற்காகத் தோளோடுதோள்நின்று கைகோர்த்துக்கொண்டு பணியாற்றுவோமென்று புசந்தட்டிக்கொண்டார்கள்.

சுதந்திரம்பெற்ற காலத்திலே இலங்கைமக்கள் தமதுஞாபகத்தில் கொள்ளவேண்டிய இருகாரியங்கள் பட்டவர்த்தனமாக எடுத்துக்காட்டப்பட்டன. அவற்றில் ஒன்று, அடைந்துகொண்ட அரசியற்சுதந்திரம் அவம்போகாமலும், பறிபோகாமலும் காத்துவரவேண்டும் என்பது. மற்றொன்று, பொருளாதாரசுதந்திரத்தை அடைந்துகொள்ளுமாறு சகலரும் ஊக்கமாக ஒத்துழைத்துவர வேண்டுமென்பது. "அரசியற்சுதந்திரத்தை நாம்பாதுகாக்க வேண்டுமானால் உண்மையான சனநாயகஆட்சி நடைபெறவேண்டியது அவசியமாகும். ஆனால், கால்கள்இரண்டும் இங்கே, கண்ணுங்கருத்துமங்கே என்றபான்மையாய் நடந்துகொள்ளும் சமதர்மவாதிகளால் அரசியற்சுதந்திரம் பறிபோகலாம்; சிங்களமொழியே, பௌத்தசமயமே அரசாங்கமொழியாய், அரசாங்கமதமாய் இருக்கவேண்டுமெனக் கிளர்ச்சிசெய்வோராலே அரசியற்சுதந்திரம் பாழாகலாம்; சிறுபான்மைச் சமயத்தவர்களை அடக்கியொடுக்க — அவர்களின்உரிமைகளைப் பறித்தெடுக்க முனைகின்ற பெரும்பான்மைச் சாகியத்தினர் அல்லதுசமயத்தினராலே அரசியற்சுதந்திரம் அடிபாறலாம்; இவ்வாறானதீமைகள் ஏற்படாவண்ணம் அரசினரும், சனத்தலைவர்களும் அதிகம்விழிப்பாயிருந்துவர வேண்டு"மென்றுஅப்போதெல்லாம் அழுத்தந்திருத்தமாக அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுவந்தது. அங்ஙனமாக இன்றைய நிலைமை யாது?

இலங்கையின் பத்தாவதுசுதந்திர ஞாபகதினவிழா கொண்டாடப்படவிருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலே இலங்கையின்நிலைமையை அவதானிப்பார் எவர்தான் கவலைகொள்ளாதிருப்பர்? இந்தப்பத்தாவது சுதந்திரவிழா வருடத்திலே மக்கள்ஐக்கியமுன்னணி அரசாங்கம்வந்து, திரு. பண்டாரநாயகா ஆட்சிப்பீடத்தில் ஏறியதும் தனிச்சிங்களசட்டம் அரங்கேற்றப்படலாயிற்று. சிறுபான்மையினரான தமிழரும், முஸ்லீம்களும் சண்டவேகத்துடன் அதனை எதிர்த்தனர். ஆனால், கண்டபலன் யாது? பெரும்பான்மைப் பலத்தைக்கொண்டு சட்டத்தை அரங்கேற்றிவிட்டனர். இப்போது சிங்களத்தைத் தமிழர், முஸ்லீம்கள்முதலாம் சிறுபான்மையினர்மீது திணியாமற்திணித்து வருகின்றனர். போதாக்குறைக்குச் சிங்களஸ்ரீயையும் புகுத்தத் தொடங்கிக்கொண்டனர். அதனால் — இலங்கையில் பண்டுதொட்டு வாழ்ந்துவரும் தமிழ்மக்கள் தங்கள்உரிமைகள் பறிக்கப்படுவதைச் சகித்துக்கொண்டு ஏனோதானோவென்று ஒருபோதுமே இருக்கமாட்டார்கள்—என்பதைச் சிங்களஅரசாங்கத்துக்குத் தெரிவிக்கச் சிங்களஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தைத் தமிழ்மக்கள் சாத்வீகமுறையிலே தொடக்கியிருக்கின்றார்கள். இலங்கையின்சுதந்திரம் பெயரளவில்தான் இருக்கிறது; தமிழராகியஎமக்கு எவ்விதத்திலும் சுதந்திரமே இல்லை; ஆகையால், நாம் இந்நாளைத் துக்கதினமாகக் கொண்டாடவேண்டும்; இலங்கைக்குளசமானர் சிங்களவர்களேஎன்பது நன்குபுலனாகின்றது; மக்கள்ஐக்கியமுன்னணி அரசாங்கம் கடைப்பிடித்துவரும் மொழிக்கொள்கையைத் தமிழ்ப்பேசும்மக்கள் ஏகோபித்து எதிர்த்துப் போராடாவிடின் வெகுவிரைவிலே தமிழ்ப்பேசும் மக்களின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடுஆதியன மறைந்துவிடும்; ஓர்காலத்தில் தமிழ்ப்பேசும்மக்கள் இந்நாட்டில் வாழ்ந்தார்கள்என்பதற்குச் சான்றுகள்தானும்அற்றுப்போகும்; சிறுபான்மையினரின் உரிமைகளை அரசாங்கம் நாளுக்குநாள் பறித்துக்கொண்டுவருகிறது; சிறுசலுகைகளை அளிப்பதன்மூலம் அரசாங்கம் முஸ்லீம்களை ஏமாற்றுகிறது; தமிழர்களை ஏமாற்றுவதற்கு முஸ்லீம்களை ஓர்ஆயுதமாக அது உபயோகிக்கிறதுஎன்பதை ஜனாப்காரியப்பர் முதலானோர் உணரவில்லைப்போலும்; தமிழர்களை அடக்கியொடுக்குவதில் அரசாங்கம் வெற்றிபெற்றுவிட்டால் அதன் அடுத்தகவனம் முஸ்லீம்கள்மீதுதான் விழும்; அதனால் தமிழரும், முஸ்லீம்களும் ஒன்றுசேர்ந்து ஐக்கியமாகநின்று சிறுபான்மையினரின் உரிமைகளுக்காகப் போராடவேண்டியகாலம் வந்துவிட்டது—என்பனவாகத் தமிழ்,முஸ்லீம்பிரமுகர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார்கள்.

போதாக்குறைக்கு மக்கள்ஐக்கியமுன்னணி அரசாங்கம் சோவியற்ருஷியாவுடனும்,செஞ்சீனாவுடனும் இராசியஉறவு பூண்டிருப்பதிலிருந்தும், இலங்கைக்கு விஜயஞ்செய்திருக்கும் செஞ்சீனப்பிரதமர்சோ-என்-லாய்க்கு இராசவரவேற்புஅளித்துக் கொழும்பிலே நடைபெறவிருக்கும் சுதந்திர ஞாபகதின விழாவிலும் பாராளுமன்றத்திலும் அவர்பேசுவதற்கும் வசதிசெய்திருப்பதிலிருந்தும் இலங்கையிலே கம்யூனிஸ்தர்களின் செல்வாக்குஅதிகரிக்க வழிபண்ணிவிட்டிருக்கிறது. அதனால் இலங்கைக் கம்யூனிஸ்தகட்சியினர் ஒருபுசம்இருபுசமாகப் பூரித்து அரசாங்ககட்சியுடன் ஒத்துழைக்க முன்வந்திருப்பது ஓர் ஆச்சரியமன்று. இவர்களின்ஒத்துழைப்பானது இலங்கையை எங்குகொண்டுபோய் இறக்கிவிடுமோ, அரசாங்கத்தின் கதிதான் ஏதாகுமோஎன்று இந்தவேளை சிந்தனைபிறப்பதும் ஓர்வினோதமன்று. பிரதமர் பண்டாரநாயகாவினதும், அவர்சகாக்களினதும் ஆட்சிகாலத்தில் இன்னும் ஏதேது விபரீதசம்பவங்கள் நிகழுமோதெரியவில்லை.

சிறுபான்மையினருக்கு அரசாங்கம்இழைக்கும் அநீதிகளுக்கெல்லாம் ஆட்சேபம் தெரிவிக்குமுகமாகச் சுதந்திரஞாபகதினத்தை ஓர் துக்கதினமாகக் கொண்டாடவேண்டும்; சுதந்திரஞாபகவிழாவைப் பூரணமாகப் பகிஷ்கரிக்கவேண்டும்; கறுப்புக்கொடி ஏற்றவேண்டும்; கறுப்புக்கொடிகளுடன்ஊர்வலம் நடத்தவேண்டுமென்று பலவிதஆயத்தங்களும் நடைபெறுகின்றன. அம்மம்ம! இதுவரை ஓர்சந்தோஷதினமாகக் கொண்டாடப்பட்டுவந்த

## சுதேச வர்த்தமானம்

### குருப்பட்டாபிஷேகம்

நாம்முன்னர் தெரிவித்திருந்தபிரகாரம் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே அடுத்துநிகழும் மாசிமாதம் 4-ந்திகதியாகிய வருகிறதிங்கட்கிழமைகாலை 7-30 மணிக்கு வண. ஜே. பி. தேவராஜ்பிறதர் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெறுவார். அத்தருணம் கத்தோலிக்கமக்கள் ஆசனக்கோவிலிலே பெருந்திரளாகச் சமுகமளித்துப் புதிய குருப்பிரசாதிக்காக மன்றாடிக்கொள்வார்களாக.

### பஸ்களும் தமிழ்எழுத்துகளும்

யாழ்ப்பாணத்திலுள்ள சகலபஸ்கம்பெனிகளும் சென்ற 28-ந்திகதி திங்கட்கிழமைகாலை தமிழ்க்காங்கிரஸ்தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்களினது வேண்டுகோளின்பேரிலே தங்கள் பஸ்களின் இலக்கத்தகடுகளிலுள்ள எழுத்துகளைத் தமிழ் எழுத்துகளாக மாற்றிவிடலாயின. அங்ஙனம்மாற்றும் வைபவத்தை அவரே ஆரம்பித்துவைக்கவேண்டுமென்று மக்கள் கேட்டுக்கொண்டமையால் அவரும்பெரியகடைவீதிப் பஸ்நிலையத்தில் புறப்படுவதற்குத் தயாராக வரிசையாய்நின்ற அநேகபஸ்களில்ஒன்றின் இலக்கத்தகட்டிலிருந்த எழுத்துகளைப் பலத்தகரகோஷத்தினிடையே தமிழ்எழுத்துகளாக மாற்றிவிடலாயினர்.

### அரசாங்க தூதுக்கோஷ்டி

சிங்களஸ்ரீ சட்ட மறுப்புஇயக்கம் நடைபெற்றுவரும் வடமாகாணத்துக்கும், கீழ்மாகாணத்துக்கும், ஏனையபகுதிகளுக்குஞ்சென்று அங்குள்ளநிலைமைகளை ஆராய்ந்துவருமாறு அரசாங்கதூதுக்கோஷ்டிஒன்றை அனுப்பத்தாம் ஆலோசித்திருப்பதாகச் சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அரசாங்ககட்சிக் கூட்டத்திலே பிரதமர்பண்டாரநாயகா தெரிவித்திருக்கின்றார். சிங்களஸ்ரீ சட்டமறுப்பு இயக்கத்தைக் கொண்டுநடத்துவார்மீது நடவடிக்கைஎடுக்கவேண்டியது அவசியமென்றும், இந்த இயக்கம் பரவுதற்குமுன்னர் அதனை முளையிலேயேகிள்ளிவிட வேண்டுமென்று அரசாங்க கட்சியைச்சேர்ந்த அநேக எம். பி. கள் பிரதமரைக் கேட்டுக்கொண்டபோதிலும் அவர்களுடைய கேள்விக்கு அவர் உடன்படவில்லை. ஏனெனில், அவசரப்பட்டு நடவடிக்கைஎடுக்க அவர் மறுத்துவிட்டார்.

---

● கிழக்குஜேர்மனி நீங்கலாக ஐரோப்பாவிலுள்ள ஒவ்வோர்நாட்டினதும் குடிசனத்தொகை கடந்த பத்து வருடங்களிலும் அதிகரித்திருக்கிறது. கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியின் குடிசனத்தொகை குறையக்காரணம், அங்கு வசித்திருந்தவர்களில் 25 லட்சம்பேருக்கு மேற்பட்டவர்கள் கம்யூனிஸ்தஆட்சியின் கொடுமைக்காற்றாது மேற்குஜேர்மனிக்கு ஓடித்தப்பியதேயாகும்.

---

சுதந்திர ஞாபகதினமானது அச்சுதந்திரத்திற்காக ஒன்றுசேர்ந்துஉழைத்தமக்களுள்ஒருபாலாரால் இப்போது துக்கதினமாகக் கொண்டாடப்படவிருப்பது மனம்வருந்தத்தக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடே...! உன் புதல்வர்கள்...! உன் இரட்சணியம்...!

— நிர்மலன் —

இன்றையஉலகில் தேசத்தொண்டு, தேசக்கலை, தேசாபிமானம், தேசிய பாஷை என்றவிஷயங்கள் அம்பலப்படுவதை அனைவரும் நன்கறிவர். தேசாபிமானத்தாற் தூண்டப்பட்டுத் தேசத்தொண்டுபுரிவோர் தேசக்கலைகளை வளர்க்க எடுக்கும் அயராமுயற்சியை நாம் அறியாதவரல்ல. ஒவ்வொருதேசமும்,நாடும் தத்தம்நாட்டின் பிரச்சினைகளைப் பிறதேசத்தாரின் உதவியையும், ஆதரவையும்கொண்டு தாமாகவே ஒழுங்குசெய்ய முயலுகின்றன. இத்தகைய தேசியப்பான்மையும், தேசிய உணர்ச்சியும், அபிமானமும் காட்டுத்தீபோல் பரவிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் நமதுகதியென்ன?

இவ்வாறு ஏனையதேசங்களும், நாடுகளும் தத்தம்தேவைகளை உணரும் இத்தருவாயில், நாமும் எமது சிறுதீவின் தேவைகளை உணராதிருப்போமேயாகில், அது மெய்யாகவே வியப்புக்குரியதோர் விஷயந்தான். வேதவிஷயத்தில் விசுவாசப்பரப்புதலைச் சற்றுஆராய்வோம். இன்றையநிலையை ஆராயும்போது இதேபரப்புதலுக்குப் போதியகுருமார் இல்லாமையை நன்குணர்வோம். தற்போது இலங்கைக்கு வரும் பிறதேசகுருமாரின் தொகை குறைந்துவிட்டது. போதிய வேததொண்டர்கள் இல்லாத இக்காலத்தில் இலங்கைக்கு அனுப்பப்படும் பிறதேசகுருமாரின்தொகை தினமும்குறைந்துவரும் இத்தருவாயில் இக்குறையை நாம்அல்லாது வேறெவர் தீர்ப்பர்? தேசியகுருமாரின் தொகையை அதிகரிக்கச்செய்யும்கடமை இத்தேச கத்தோலிக்கரைப் பொறுத்தது. இன்றைய இளம்வாலிபரைப் பொறுத்தது. அதனால் ஈழத்தின் இளங்கத்தோலிக்க வாலிபர் முன்வரவேண்டும். ஆகவே, இளம்கத்தோலிக்க புனிதவீரனாகும் நீ —ஆம் நீ—முன்வரவேண்டும்.

இக்குறையை இளம்வாலிபர் எவ்வாறு தீர்க்கலாம்? அவர்கள் தங்கள் கடமையை எவ்வாறு நிறைவேற்றக்கூடும்? இவைஅத்தனை கஷ்டமல்ல. முதலாவதாக, தேவன் எவனைத்தமது சேவைக்கு அழைக்கிறாரோ, அவன் அவரது அன்பின்அழைத்தலை அரவணைக்கவேண்டும். அவ்வழைத்தலுக்குச் செவிசாய்த்தபின், அதனை ஏற்றமுறையில் ஆதரிக்கவேண்டும். தனது மதியீனத்தாலோ, அல்லது கவனயீனத்தாலோ அதை இழக்கக்கூடாது. சிலதருணங்களில் அழைத்தலை இழக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படக்கூடும். அத்தருணங்களில் தனதுஆத்துமகுருவின் உதவியை நாடவேண்டும். தனது கவனயீனத்தாலோ அல்லது மதியீனத்தாலோ அழைத்தலை இழந்தால் அதற்குப் பொறுப்பாளி அவனே.

வேதபோதகரின் குறைவை நாம் எத்திக்கிலும் காண்கிறோம். இலங்கையிற்றானும் மேற்றிராசனங்களை உற்றுநோக்கினால், அவற்றிலே சேவைபுரிகின்ற குருமார் செய்யவேண்டியிருக்கும் மிதமிஞ்சியசேவையை அறியலாம். அவர்கள்மேல் சுமத்தப்பட்டிருக்கும் சுமை மிகப்பாரமானதென்பதை நாம் கண்டுகொள்ளலாம்.

ஏன்? தேவதொண்டரின் தொகை குறைந்தது? இக்குறையை நிவிர்த்தி செய்வது தற்போது இதைவாசிக்கும் தம்மைப்பொறுத்தது. உலகின் பல பாகங்களிலும்போலவே இலங்கையிலும்ஞான அறுவடைமிகுதியாய்இருக்கின்றது. இந்தஅறுவடை வீண்போகாது. அதைப்பராமரிப்பது கத்தோலிக்கராகிய நமதுகடமை. அது வீண்போகாதிருக்கவேண்டுமானால்,அதைத் தகுந்தகாலத்தில் அறுக்கப் போதிய வேலையாட்கள் அவசியம். ஆனால், போதியதொகை இன்று நமதுநாட்டில் கிடையாது. போதியதொகை எங்கிருந்துவரும்? போதியதொண்டரை எங்கேதேடலாம்? இன்றைய வாலிபர் மத்தியிலேயே தேடவேண்டும். புனிதவீரனே! இலங்கை மக்களின் இரட்சணியம் உனதுகையில் இருக்கிறது. உனதுதாய்நாட்டுக்காக, தேசமக்களுக்காக, கத்தோலிக்க சமயத்துக்காக அயராத்தொண்டுபுரிய உண்மையானவீரன் ஒருக்காலும் பின்வாங்கமாட்டான்.

புனிதவீரனே! நீரும் ஓர்உண்மையான வீரனென்றால் ஏன் இக்குறையைத் தீர்க்காதிருக்கின்றீர்? உமது நாட்டு மக்களுக்காக உமதுசீவியத்தை — வாழ்நாட்கள்அனைத்தையும் கடவுள்சேவைக்கு அர்ப்பணஞ்செய்ய ஏன்பின்வாங்குகிறீர்? நேசதேவனுக்காகவும், தாய்நாட்டுக்காகவும் உந்த சேவைபுரியச் சந்தர்ப்பமளிக்கப் பட்டபோது பின்வாங்குவதும், தாமதஞ் செய்வதும் உண்மைவீரனின் குணமல்ல. அச்சேவையின் கஷ்டங்களைப் பாராது, சுயநலத்தைப்பாராது நேரிடக்கூடிய இன்னல்களைப்பாராது, முழுமனதோடும், முழுச்சம்மதத்தோடும் தன்னைத்தானே அச்சேவைக்குஅளிப்பதுதான் ஓர்உண்மையானவீரனின் ஆண்மை. சிலர் இத்தகையசேவையை ஓர்சிலுவையென்று கருதலாம். ஆம், ஓர்சிலுவைதான். சிலுவையைச் சுமந்து கல்வாரியில்மரித்து மூன்றாம் நாள் மகிமையுடனும், மகத்துவத்துடனும் தேவன் உயிர்த்தெழுந்தார். தமதுமரணத்தால் அஞ்ஞானத்தை ஒழித்து மெய்ஞ்ஞானத்தை நிலவச்செய்தார். நரகஅலகையைவென்று பாவிகளைமீட்டுப் பரகதிக்குப் பாதையைத்திறந்துவைத்தார். சிலுவையின் வாயிலாக உலகுக்கு இரட்சணியம் அளிக்கப்பட்டது. அன்று முள்முடிதரிக்கப்பட்ட அதேதேவனே இன்று ஓர்பொன்முடியைத்தரித்துச் சகலரினதும் வல்லமையான கர்த்தாவாகத் தோன்றுகிறார்.

அன்று நமதுதேவன்செய்த இச்சேவையைப்புரிய இன்றுஉமக்குச் சந்தர்ப்பம்அளிக்கப்படுகிறது. கலிலேயமலைப்பிரதேசத்திலும், கல்வாரியெனும் பிரசங்கமேடையிலும் கிறிஸ்துநாதர் வேதத்தைப் போதித்ததுபோல, ஈழநாட்டில் உமது மக்களுக்கு அதேவேதத்தைப்போதிக்க உமக்கு அழைத்தலிருக்கிறது. இவ்வழைத்தலுக்குச் செவிசாய்த்தல் ஓர்பாரமானசிலுவையை ஏற்றுக்கொள்கிறதென்று நீர்கருதினால், அச்சிலுவையைப் பாராது, அதைச்சுமந்து கல்வாரிமட்டும்சென்றவருடையகொடையாகும் பொன்முடியைப்பாரும். அச்சிலுவை பாரமென்று நீர்நினைத்தால் — கொலைமரமென்று முன்கருதப்பட்ட அச்சிலுவைக்கு மகிமைஅளித்து அதில்அறையுண்டிருக்கும் தேவனைப்பாரும். அச்சிலுவையில்அறையுண்டு, ஆத்துமாக்களில் தாகங்கொண்டதேவன் திருவாய்மலர்ந்ததைக்கேளும்! 'நான் தாகமாயிருக்கிறேன்.' இதைக்கேட்டயூதர்கள் அவருக்குக்காடியைப் பானமாகக் கொடுத்தனர். உன்னைப்பார்த்து அதேவிதமாகக்கூறும் தேவனுக்கு என்ன பதிலளிப்பீர்? யூதரைப்போல் காடியைப்பானமாகஅளிக்க மனதாயிருக்கிறீரோ, அல்லது 'இதோ, உமது தாகத்தைத்தீர்க்கமுன் வருகிறேன்' என்று சொல்லப்போகிறீரோ?

தேவன்உம்மை அழைக்கிறார்— உமது சம்மதத்தைக் கேட்கிறார்— உமது தாய்நாடு உம்மைநாடுகிறது. உமது சேவையைக் கேட்கிறது. அநேகர்தமக்குமெய்ஞ்ஞானத்தைப்போதிப்போரின்றி, அஞ்ஞானத்திலே திருப்தியைத்தேடுகின்றனர். இருளிற்தவிக்கின்றனர்.இவ்வஞ்ஞான இருளைமெய்ஞ்ஞான அருளால்ஒழித்து, மெய்ஞ்ஞானமதத்தை அநேகருக்குப்போதிக்க அப்போஸ்தலனாகும்பாக்கியம் இதோ உமக்கு அளிக்கப்படுகிறது. புனிதவீரா! பின்வாங்கவேண்டாம் — வீரனைப்போல் உற்சாகத்துடனும், வீரத்துடனும், ஊக்கத்துடனும் கடவுளின் அழைத்தலுக்கு "இதோ உமதுஅடியான் உமது வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" என்று உமதுசம்மதத்தை இன்று, இல்லை இப்போது கொடும்.

13-ம்சிங்கராயப்பாப்பு இந்தியநாட்டைப்பார்த்துக்கூறியதுபோல, இன்று இலங்கையைநோக்கி:

'ஈழநாடே! உன்புதல்வர்களே உன்இரட்சணியத்தின் தூதர்களாக இருப்பார்கள்' என்றுகூறலாம்.

மருதமடுச்செபமாலை மாதாவே! எங்கள்மத்தியில் பரிசுத்தரான தேவதொண்டர்கள் அதிகரிக்கச்செய்யும்.

குரு இன்னொரு கிறீஸ்து



இதுவே குருத்துவத்தின் மகிமை!

**மகிழ்ச்சி பொங்கும் சிரிப்புக்கு ஊற்று மகிழ்ச்சிநிறைந்த இருதயந் தான். கருணை யில்லாவிட்டால் உண்மையான மகிழ்ச்சி இருக்காது.**

## சிங்கள ஸ்ரீமாற அனுமதியோம்

"ஸ்ரீ அடையாளம் அணுவளவேனும் மாற்றப்படுமானால் அதை நிலைநாட்டுமாறு நாங்கள் வேறு ஜனநாயகமுறைகளைக் கையாளுவோம்; இந்தப்பிரச்சினையில் அரசாங்கத்துக்குப் பக்கபலமாக முழுநாடும் இருக்கிறது; சமஷ்டிவாதிகளின் மிரட்டலுக்கு அரசாங்கம் அடிபணியக் காரணமேயில்லை" என்று பண்டித மேதங்கார நாயகதேரோ என்னும் புத்தகுருவும், "இந்நாட்டில் நுழைவதன்மூலம் தங்கள் சென்னை ஏகாதிபத்தியத்தைத் திணிப்பதற்கு இலங்கைத்தமிழரை ஓர்கருவியாகப் பாவிக்கும்சென்னைக்காரர்களே ஸ்ரீக்கு எதிராகச் சமஷ்டிவாதிகளைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள்" என்று பண்டித பிரேமானந்த தேரோஎன்னும் மற்றோர்புத்தகுருவும் சென்ற 16-ந்திகதியன்று கம்பளையில்நிகழ்ந்த கூட்டம் ஒன்றிலே பேசியிருக்கின்றார்கள்.

## பொலிஸ்இன்ஸ்பெக்றர் ஜெனறல்மீது

சமீபத்திலே சிலாபத்தில் நடைபெற்ற இருகூட்டங்களில் அரசாங்க எம். பி. களைக் கண்டித்ததற்காகப் பொலிஸ்இன்ஸ்பெக்றர் ஜெனறல்மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்குமாறு பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று பாராளுமன்ற அரசாங்க கட்சிக்கூட்டத்தில் சிலாபத்தொகுதிப் பிரதிநிதியும், அரசாங்ககட்சிப் பிரதம கொறடாவுமான திரு. ஜே. சி. டபிள்யு. முன்சிங்கா சமர்ப்பித்திருக்கின்றார். பொதுக்கூட்டங்களில் பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கண்டிக்கும் பொலிஸ்இன்ஸ்பெக்றர் ஜெனறலின் நடவடிக்கையைஎதிர்த்து அவசியமான நடவடிக்கையைப் பொலிஸ்பகுதியின் பொறுப்பாளியானபிரதமர் எடுக்க வேண்டுமென்பதே அவரின்பிரேரணையாகும்.

## காட்டிக்கொடுக்கும் குழந்தைகள்

சதுப்புநிலத்தினூடாகவோ, அன்றேல் காட்டினூடாகவோ வழிபிடித்துத் தங்கள் நாட்டைவிட்டுத் தப்பியோடுகின்ற அநேக ஹங்கேரிய அகதிகள் தங்கள் சுதந்திர பிரயாணத்தின் ஈறுந்தகட்டத்திலும், சிலவேளைகளிலே தாங்கள் தாண்டிச்செல்லவேண்டிய நாட்டின் எல்லைப்புறத்திலிருந்து சிலயார் தூரத்தில்தானும் தங்கள் சொந்தப்பிள்ளைகளாலேயே காட்டிக்கொடுக்கப்பட்டு விடுகிறார்கள். கைகளால் ஏந்தப்பட்டுள்ள ஒரு குழந்தையின் அல்லது தள்ளாடிக்கொண்டு செல்லும் ஓர்பிள்ளையின் அழுகைச்சப்தமும், இரவின்கடுங்குளிரால் வருந்துகின்ற ஓர்பிள்ளையின் உரத்தஇருமலும் ஓர்குடும்பம் முழுவதுக்குமே மரணத்தையும், கைது செய்யப்படுவதையும் கொண்டுவந்துவிடுகின்றன. ஆனால், தற்போது இந்தஅகதிகள் இந்தஆபத்தை நன்கறிந்து அதற்கான பரிகாரம் ஒன்றைக் கையாடிவருகிறார்கள். தங்கள் சிறுபிள்ளைகளுடன் நாட்டின்எல்லைகளைக் கடந்துசெல்லுகையில், ஓர் மருந்துகொடுத்து அவர்களை அயர்ந்து தூங்கச்செய்து கோணிப்பைகளில்இட்டுத் தோள்களிற் சுமந்து செல்லுகிறார்கள். ஹங்கேரியிலே அந்தரங்கமாக நடைபெற்றுவரும் வைத்தியசேவையைச்சேர்ந்த டக்றர்மாரே இந்தமருந்துகளை அளவுகுறித்துக் கொடுத்துவருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

"மோட்டார்ரதங்களில் சிங்கள ஸ்ரீ இலக்கத்தகடுகள் ஒன்பதாயிரம்ஆண்டுகளுக்கு இருந்துவரும். கடந்த ஒன்பதுமாதகாலத்திலும் சமஷ்டிவாதிகள் எம். ஈ. பி. அரசாங்கத்துக்குப் பெருந்தொல்லை கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவுகாலமும் நாங்கள் பொறுமையாகவே இருந்துவந்தோம். ஆனால், இனிமேலும் அவ்வாறு பொறுத்துக்கொண்டிருப்பதென்பது முடியாதகாரியம். சிங்களவர்களுக்கு எதிரான இயக்கத்தைச் சமஷ்டிவாதிகள் உடனடியாக நிறுத்தாவிடின் நாங்கள் அமைதியின்போரால் அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டிவரும்."

— கல்விமந்திரி தஹநாயகா

* * *

"கம்யூனிஸ்த கட்சி விஷயமாய்க் கவனமாயிருக்க வேண்டுமென்று நான் தமிழ்மக்களை எச்சரிக்கிறேன். கம்யூனிஸ்தார்கள் என்றுமே எதிர்ப்புப் புரட்சிக்காரர்கள். தமிழ்பேசும் மக்களின் புரட்சியைநசுக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலே பொதுசன அபிப்பிராயம் அவர்களுக்கு விரோதமாக இருப்பதைக்கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். கம்யூனிஸ்தார்கள் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதிகள். அவர்கள் எம ஈ. பி. அரசாங்கத்துடன் கைகோர்த்துக்கொண்டு நிற்பதிலிருந்தே அவர்களின் சந்தர்ப்பவாதம் வெட்டவெளிச்சமாகிறது. கம்யூனிஸ்தார்களைத் தமிழ்ப்பகுதிகளிலிருந்தே விரட்டியடிக்கும்படி நான் மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். யாழ்ப்பாணவாலிபர்கள் கீழ்மாகாணத்திற்குவந்து குடியேற்றதிட்டங்களிற் சேர்ந்து கமத்தொழிலை விருத்திசெய்யும்படி அவர்களை வேண்டுகிறேன்."

— திரு. எஸ். இராசதுரை,
மட்டக்களப்பு, எம். பி.

* * *

"தமிழர்களின் கடைகளையும், பொருட்களையும் சிங்களவர் பகிஷ்கரிக்கவேண்டுமென்று கல்விமந்திரி கூறியபோதிலும் நாங்கள் சிங்களமக்களைப் பகிஷ்கரிக்கமாட்டோம். எங்களை நிராகரித்து, எங்கள்உரிமைகளை மறுக்கச் சிங்கள்மக்கள் முன்வருவார்களானால் நாங்கள் கடைசிவரை போராடுவோம். எங்கள்உரிமைகள் இந்நாட்டில் எங்களுக்கு இல்லையேல் நாங்கள் மடிந்துபோவதுஎன்ற முடிபுக்கு வந்துவிட்டோம்."

— திரு. வி. ஏ. கந்தையா,
ஊர்காவற்றுறை, எம். பி.

* * *

"பொலிசாரை அரசியல்வாதிகள் பகிரங்க மேடைகளிலிருந்து கண்டிப்பது சரியல்ல. உயர்ந்த நிலையிலுள்ள அரசியல்வாதிகள் தங்களது அரசியல்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பொலிசாரைக் காரணமின்றியே வாய்க்குவந்தவாறெல்லாம் பகிரங்கமாகத் தாக்கிப்பேசுவது பெரிதும் வருந்தத்தக்கது. அரசியல்வாதிகளின் இந்தப்போக்கானது பொலிஸ் கட்டுப்பாட்டையே சீர்குலைத்து நாட்டின் அமைதிக்குப் பங்கம் உண்டுபண்ணக்கூடியதாகும். பொலிசார் ஏதேனும் தவறிழைத்தால் அதைச் சரியான முறையிலே என்னிடம் எடுத்துரைக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

— திரு. ஒஸ்மன் டி சில்வா,
பொலிஸ் இன்ஸ்பெக்றர்-ஜெனறல்.

"தமிழர் நெடுங்காலத்துக்கு முன்னிருந்தே சிங்களவரின் விரோதிகளாக இருந்து வந்திருக்கின்றனர். எப்போதும்அவர்கள் எங்களுக்கு எதிராகவே வேலைசெய்திருக்கிறார்கள். இன்று அவர்கள் ஸ்ரீக்குஎதிரான இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நாங்கள் ஓர்பொறுமையான இனம் என்பதை உலகம்அறியும். சமஷ்டிக்கட்சியினர் இந்தஅர்த்தமற்ற இயக்கத்தில் தொடர்ந்து ஈடுபடுவார்களென்றால் தமிழரின் பயமுறுத்தலை எதிர்த்துப்போராடப் பிக்குகளாகிய நாங்கள் சிங்களப் பொதுமக்களுக்கு முன்னிற்போம். சிறுபான்மையினரின் ஆதரவின்றியே எம். ஈ. பி. அரசாங்கம் நன்றாக இயங்கமுடியும்."

— புத்தகுரு நிரானந்த தேரோ,
இரத்தினபுரி.

* * *

"சிங்களப் பிரதேசத்திலுள்ள செல்லையாவினதும், சின்னையாவினதும் கடைகளைப் பகிஷ்கரிக்குமாறு திரு. தஹநாயகா சிங்களமக்களைத் தூண்டியபோதிலுங்கூட நீங்கள் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள ஒவ்வொரு சிங்கள ஆண், பெண் குழந்தைக்கும் சிறந்த பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று நாம் கூறுகிறோம். ஏனெனில், நமது டிஸ்திறிக்கிலே அவர்கள் சிறுபான்மையினராய் உள்ளனர். இங்கே சிறுபான்மையோராயுள்ள அவர்களை நாங்கள்நடத்தும் முறையினால் ஏனையோருக்கு முன் மாதிரி காட்டுவோமாக."

— திரு. வி. ஏ. கந்தையா,
ஊர்காவற்றுறை, எம். பி.

* * *

"இந்நாட்டுக்குப் பொருளாதார சுதந்திரம் கிடைக்க எல்லாச் சமூகத்தினரும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். நாம் அரசியற்சுதந்திரம் பெறுவதற்கு ஒற்றுமைதான் மூலகாரணமாக இருந்தது. இலங்கைமக்கள் இப்போதுசுகித்துவரும் அரசியற் சுதந்திரத்திற்காக முன்னின்றுபோராடிய பெரியார்களில் சேர் பொன்னம்பலம் அருணசலம்அவர்களும் ஒருவர். சேர் அருணசலம்அவர்கள் ஓர்தமிழ்மகனென்றாலும் நமதுசுதந்திரபோராட்டத்தில் பெரும்பங்குகொண்டு பேருதவி புரிந்திருக்கிறார். அதனால்தான் அவரிடத்தில் நாம்கொண்டுள்ள மதிப்பும், மரியாதையும் கொஞ்சங்கூடமாறவில்லை. அவருக்குநான் எப்போதும் மரியாதைசெலுத்துகிறேன்."

திரு. டட்லி சேனநாயகா,
முன்னைநாள்பிரதமர்.

* * *

"கல்விமந்திரி தஹநாயகாவின் பூச்சாண்டிப் பேச்சுகளையெல்லாம் கேட்டுத் தமிழ்மக்கள் தங்கள்போராட்டத்தை ஒருபோதுமே கைவிடமாட்டார்கள். சிங்கள ஸ்ரீ பிரச்சினைக்குச் சாமணிஅடிக்கப்படாதவரை நமதுஇலட்சியத்தின் இலக்கைநோக்கித் தீவிரமாகச் செல்வோம்என்பதை அவருக்கு மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். அடுத்தமாதம் 1-ந்திகதியின் பின்னரும் தமிழ்எழுத்துஇலக்க மோட்டார்ரதங்கள் ஓடுவதை அனுமதிக்கமாட்டோமென்று திரு. தஹநாயகசொல்லுகிறார். இதுவெறும் பகற்கனவேயாகும். 1-ந்திகதியிலிருந்து அரசாங்க உத்தியோகஸ்தர்களின் மோட்டார்ரதங்களின் இலக்கத்தகடுகளிற்தானும் தமிழ்எழுத்துகளைப் பொறிக்கச்செய்வதில் ஈடுபடுவோம்."

— திரு. ஸ்ரீ முருகன்
தமிழரசு வாலிபமுன்னணிப் பிரசாரக்
குழுவின் தலைவர்

## சொற்கலைப் புலவர்
## ஞானப்பிரகாச அடிகளார்
# நினைவுதினக் கட்டுரை

— ஏ. சி. கே. சாமி அவர்கள் —

[ அடிகளார் விண்ணுலகெய்திப் பத்தாண்டுகளாகின்றன. அவரது இறந்த ஞாபகதினம் தைமாதம் 22-ந் திகதியாகும். அப்பெரியாரைப்பற்றிய கட்டுரையைக் கீழே காண்க. ]

இவ்வுலகத்திலே பலர்பிறக்கிறார்கள்; இறக்கிறார்கள். அத்துடன் அவர்களின் பெயர்களும் மறைந்துவிடுகின்றன. ஆனால், சிலரின் நாமமோ அவர்கள்செய்யும் சேவைகளினால் என்றென்றும் மக்கள்மன்றத்தில் மங்காத புகழைப்பெற்று விடுகிறது. அவ்விதம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களில் நல்லூரில்வாழ்ந்த காலஞ்சென்றவண. குரவர் ஞானப்பிரகாசஅடிகளும் ஒருவராவர். கிறிஸ்துவ உலகிற்கும், தமிழ் இனத்திற்கும் — முக்கியமாகத் தாழ்த்தப்பட்ட சகோதர சமூகத்திற்கும் இவர் ஆற்றியதொண்டு என்றும் மறக்க முடியாததாகும்.

அடிகளார் இந்துமதத்தைச்சேர்ந்த சுவாமிநாதபிள்ளைக்கும், அவரது மனைவியார் தங்கமுத்துவுக்கும் அருந்தவப் புதல்வராக மானிப்பாயில் 1875-ம் ஆண்டு ஆவணி மாதம் 30-ந் திகதி தோன்றினார். தமதுகல்வியைச் சம்பத்திரிசியார் கல்லூரியில் முடித்துக்கொண்டு 20-ம்வயதில் அரசாங்கக் கடுகணவைப் புகையிரதநிலையத்தில் கடமையாற்றத் தொடங்கினார். ஆனால், அவரின் தியானமெல்லாம் கடவுளிடத்துப் பதிந்திருந்தது. ஆகவே, மூன்று வருடங்களின்பின் வேலையைக்கைவிட்டு விலகி, அமலோற்பவ மாதா சபையிற் சேர்ந்தார். 1901-ம் ஆண்டு அடியார் அவர்கள் குருப்பட்டம் பெற்றார். 1904-ம் ஆண்டுவரை ஊர்காவற்றுறையிலும், சென்மேரிஸ் ஆசனக்கோவிலிலும் ஓர் உதவிக் குருவானவராகக் கடமையாற்றினார். ஆனால், 1904-ம் ஆண்டு தொடக்கம் 1947-ம் ஆண்டு இவ்வுலகவாழ்வைவிட்டு நீங்கும்வரையும் மதபோதகராக ஒப்பற்ற தொண்டு புரிந்தார். அடியார்அவர்களின் வாழ்நாள்முழுதும் சமயம், மொழி ஆதியனவற்றின் ஆராய்ச்சியிற் கழிந்தது. இப்பெரியார் கல்விமான் என்றமுறையில் சிறந்தவரா, அல்லது சமயத்தொண்டிலே சிறந்தவரா என்று பார்ப்பின் எதில் சிறந்தவரென்று கூறமுடியாதவாறு இருதுறைகளிலும் அளவற்ற தொண்டுகளைப் புரிந்திருக்கின்றார். இவரிடத்தில் காணப்பட்ட எளிமை நிறைந்தவாழ்க்கையும், சிறந்தகுணமும், பிஞ்சுமனமும், சொற்போர்த்திறமையும் யேசுவின்போதனைக்கு அவரின் நெஞ்சத்தில் இடங் கொடுக்கும்படி செய்தன. பிற்காலத்தில் மதப்பிரசாரத்தில் வெற்றிகாண்பதற்கு இவரது உயரிய பண்பு இவருக்கு உறுதுணை புரிந்தது. அடியார் ஓர்உலகப்பிரசித்தி பெற்ற தமிழ் ஆராய்ச்சியாளரென்று கூறினால் மிகையாகாது. இவர் பழம் பெருமைகளைப்பற்றி ஆராய்வதில் தனி ஆர்வங் கொண்டிருந்தார். பழைய நாணயங்களைச்சேர்த்துவைத்து அதன் மூலம் சரித்திரஆராய்ச்சிகள் நடாத்தி வெற்றியுங்கண்டார். புராதனசரித்திர ஆராய்ச்சிக் குழுவிலும் அங்கம்வகித்தார். அடியார் அவர்கள் 21 மொழிகளைத் தெரிந்தும், அவற்றுள் தமிழ், சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், பிறெஞ்சு, லத்தீன்போன்ற பதின்மூன்று மொழிகளில் சிறந்தும்விளங்கினார். இம்மொழிகள்இவரது தமிழ்மொழிஆராய்ச்சிக்கு உறுதுணை புரிந்தன.

தமிழுக்கு இவராற்றிய தொண்டினைப் புகழ்ந்து பாரதநாட்டைச் சேர்ந்த கல்விமான்கள் "சொற்கலைப்புலவர்" எனும்பெருமை மிக்க பட்டத்தைச் சூட்டினர். இவர்எழுதிய தமிழ், சமய நூல்கள் இலங்கையிலும், இந்தியாவிலும் —ஏன் தமிழ்மக்கள்உள்ள எல்லாவிடங்களிலும் பாவனையில்இருந்துவருவதே அவரின் புகழுக்குத் தக்க சான்றாகும்.

சுவாமி ஞானப்பிரகாசர் கத்தோலிக்கமதத்திற்கும், தமிழ் மொழிக்கும் ஆற்றிய தொண்டு மறக்கற்பாலதொன்றன்று. இவர் சிறந்தஎழுத்தாளர். அரிய பேச்சாளர். ஆராய்ச்சியாளர். அருள் நெஞ்சம் படைத்தவர். மதபோதகர். இவையாவுஞ் சேர்ந்து, மக்களை அவருக்கு விழாவெடுக்கத் தூண்டியது. இவர் புகழ் என்றென்றும் வாழ்க!




"நமது ஆண்டவரின் மரணத்தின் இரகசியத்தை நீங்கள் நிறைவேற்றுகிறதால்........."

"நீங்கள் கையாடுவதைக் கண்டு பாவியுங்கள்."

● பெருந்தொகையான மீன்களைப் பிடிக்கக் கடற்தொழிலாளருக்கு உபயோகமாகக்கூடியதாய்த் தண்ணீருள் இயங்கும் றேடியோ செற் ஒன்றை மேற்கு ஜேர்மனியிலே வீஸ்பேர்டன் நகரைச்சேர்ந்தகம்பெனிஒன்று கண்டுபிடித்திருக்கின்றதாம். இந்த றேடியோசெற் வலையுடனிணைக்கப்படுமிடத்து எவ்வளவு ஆழத்தில் மீன்திரள் இருக்கிறதென்பதைப் படகிலுள்ள கடற்தொழிலாளர் கண்டறிய முடியுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைச்சுடர்

புனிதவளனார் ஆசிரியகலாசாலையின் 1956-ம்ஆண்டுக்குரிய கலைச்சுடர்மலர் வெளிவந்துவிட்டது. இதன் பிரதியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பழையமாணவர்கள் எமக்கு, அல்லது சங். தாயார் மரியா அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

**விலை ரூபா 2. தபாற்செலவு சதம் 20.**

**சுவாமி வ. தீயோகுப்பிள்ளை**
அதிபர்.

புனிதவளனார்,
ஆசிரியபயிற்சிக்கலாசாலை,
கொலம்பகம்.

## வண. சாம் அலெக்சாண்டர் சுவாமியார்

இற்றைக்கு ஒரு மாதத்தின்முன் மார்கழித்திங்கள் 28-ந் திகதியன்று இங்குராத்கொடையில் முதல் விசாரணைப்பங்கை ஏற்படுத்திய வண. சாம் அலெக்சாண்டர் சுவாமியவர்கள் மரணத்திரையுள் மறையலானார். திரிகோணமலை மேற்றிராசனத்தைச் சேர்ந்த இக்குரவர் அதிககாலமாக நோய்கண்டு வருந்தியபோதிலும் சில கத்தோலிக்கரையும், பலகத்தோலிக்கரல்லாதவரையும்கொண்ட தம்மேற்றிராசனத்தில் தேவனுடைய இராச்சியத்தைப்பரப்ப அயரா ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் உழைத்து வந்தார்.

முதன்முதலாக இங்குராத்கொடை சென்றபோது அவ்விடம் ஒரே காடாய்க் காட்சியளித்தது. அன்று காடாய்க்கிடந்த அதேயிடத்தில் இன்று ஓர்அழகிய கிறீஸ்துஇராசா கோயிலும், பாடசாலையும், நெசவுபாடசாலையும் காட்சியளிக்கின்றன. இவைகள் அவரின் அயராஉழைப்புக்கு நற்சான்று பகருகின்றன. இவரது ஊக்கத்தின்சான்றாக அன்று சிங்களமன்னர்கள் ஆட்சிபுரிந்த 'இராசரட்டை'எனுமிடத்தில் இன்று கிறீஸ்துஇராசா ஆட்சி செய்கிறார். சுவாமியார்அனைவருடனும் பழகியவர். இலங்கையின் எத்திசையிலும் இவரை அறியாதவரில்லை எனலாம். கத்தோலிக்கரும், ஏனைமதத்தினரும், செல்வந்தரும், ஏழைகளும இவரது சிநேகிதராய் இருந்தனர். மற்றவர்கள் தமது அபிப்பிராயத்துக்கு இசைந்துநடக்கச்செய்வதில் இவர்மிகவும்வல்லவர். தமிழ், சிங்களம், ஆங்கிலமாகிய மூன்றுபாஷைகளையும் பிழையின்றிப்பேசும் ஆற்றல்வாய்ந்தவர். இவரது சொந்தத்தம்பியும், "இலங்கையின் புல்றன் ஷீன்" என்று அழைக்கப்படுகிறவருமான வண. அலெக்ஸ் ரனசிங்கசுவாமியார் தற்போதுவாஷிங்டன்நகர கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் கல்விபயின்றுவருகிறார்

வண. சாம் அலெக்சாண்டர் சுவாமியவர்களால் குருமடத்துக்கு அனுப்பப்பட்டோருள் சங். சகோதரர் ஜே. எல். ஏ. கோஸ்ரா, டி. அம்புறோஸ் ரூபசிங்க இவர்கள் கண்டியில் இலங்கைமாதாவின் தேசியக்குருமடத்தில் குருப்பட்டத்துக்குப் படிக்கின்றனர். இருவரும் திரிகோணமலை மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்கள். இவரின் பூதவுடம்பு அழிந்தபோதிலும் புகழுடம்பு என்றும் நிலைத்திருக்கும். இவரை அறிந்தோர் இவரை என்றும் மறவாதிருப்பர் என்பது மிகையாகாது.

**R. I. P.**



"உங்களுடைய போதகத்தாலும், நடத்தையாலும் சருவேசுரனுடைய குடும்பமாகிய ஆலயத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு........"

● சுதந்திர மேற்குஜேர்மனியிலிருந்து அமெரிக்க படைகளைத் தருவித்துக் கொள்வதுபற்றி ஆலோசிக்கும்படியாக அமெரிக்கஅரசாங்கத்துக்கு அதன்செனற்சபை வெளிநாட்டு உறவுக்கம்மிற்றியின் தலைவரான செனற்றர் ஹாம்பே அவர்கள் சிபாரிசுசெய்திருக்கின்றார். இத்தகைய ஓர்நடவடிக்கையால் ஐக்கிய ஜேர்மனிஏற்பட அதிகசாதகம் உண்டாகுமென அவர்கூறியிருக்கின்றார்.

● பிரித்தானியும், பிரான்சும் படையெடுத்து எகிப்தைத்தாக்கியதால் அதற்கு ஏற்பட்டநஷ்டம் ஐம்பத்தொன்றரைக் கோடி பவுணென்று மத்திய கிழக்குச் செய்திஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது. இந்நஷ்டஈட்டுத்தொகை முழுவதையும் தனதுஎதிரிகளிடமிருந்து அறவிட எகிப்து ஆயத்தப்படுகிறதாம்.

## பிரியாவிடை வைபவம்

துள்ளுக்குட்டிக்குடியிருப்பு சென்மேரிஸ் பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. பே. இராயப்புஅவர்களின் இடமாற்றத்தை முன்னிட்டுச் சென்ற 10-1-57 அன்று பிரியாவிடைவிழா ஒன்று உதவிஆசிரியையாலும், மாணவராலும், பெற்றோராலும் நடத்தப்படலாயிற்று. சக்கிறிஸ்தாம் நீ. சவிரி அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்க, ஆசிரியரும் பாரியாரும் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். மாணவர்கள் பிரியா விடைப்பாக்கள் படித்தனர். திரு. மி. பிலிப்பு என்பவர் பிரிவுஉபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்தார். மெலிஞ்சியும், சக்கிறிஸ்தாமும் ஆற்றியசொற்பொழிவில், ஆசிரியரின் கடமைஉணர்ச்சி, காரியத்திறன், விடாமுயற்சி, பிறர்நேசம்என்பவற்றை எடுத்துக்காட்டிப் பாடசாலையைப் பதிவுசெய்து பிள்ளைகளுக்குநல்லறிவூட்டுவதில் கருத்துடன் காலத்தைச் செலவழித்தார்என்று பாராட்டினார்கள். பிரியாவிடைஆசிரியர் தமது பதிலில் விழாவைநடத்தி அன்பளிப்புச்செய்த அனைவருக்கும் நன்றிதெரிவித்தார். ஈற்றில் பெரியோர்கள் ஆயத்தஞ்செய்த வான்ஒன்றில் ஆசிரியகுடும்பத்தினரை அவர் சொந்தஊரான விடத்தல்தீவுக்கு வழிஅனுப்பிவைத்து மீண்டனர்.

— நிருபர்

## நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் திருஇரக்கத்தாலும், பரிசுத்த லூர்துமாதாவுடைய அற்புதமான தண்ணீரினாலும், முத். மாட்டின் தெ போரஸ்உடைய உதவியாலும் அர்ச். செபஸ்தியாருடையவும், அர்ச். ஆரோக்கியநாதருடையவும் மன்றாட்டாலும் நான் கடும்தொய்வினால் உண்டான முட்டுத்தாக்கினின்று அதிசயத்துக்குரியவிதமாகக் குணமடைந்தேன். நேர்த்திப்படி இதனைப்பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் புகழப்படுவதாக.

யாழ்ப்பாணம் A. S.

## மரணசங்கதி

தாளையடியைத் தனதுஜனனபதியாகக்கொண்டவரும், யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னிகாமடப் பாடசாலையிலே ஆசிரியத்தொண்டாற்றியவரும், குருநகர் சென்ஜேம்ஸ்ஆண் பாடசாலை ஆசிரியர் திரு. சி. எஸ். ஏ. செபமாலைஅவர்களின் பாரியாரும், யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னிகா மடப்பாடசாலையில் ஆசிரியத்தொண்டாற்றும் செல்வி செபமாலைஅந்தோனிப்பிள்ளையின் சகோதரியும், பேராசிரியர் திரு. பி. சவரிமுத்து, எம். ஏ. அவர்களின்மருமகளுமாகிய திருமதி பரிபூரணம் தங்கம் செபமாலைஅவர்கள் சென்ற 22-1-57 செவ்வாய்க்கிழமைமாலை 6மணியளவிலே மரணத்திரையில் காத்திராப்பிரகாரம் மறையலாயினார். இவரின் பூமதானம் மறுநாள்மாலை 5மணியளவில் திரளானஇனசனர், ஆசிரியர், மாணவர், மாணவிகள் ஏனையோர் செபமாலை செபித்துச்செல்ல, யாழ்ப்பாணமேற்றிராசன கத்தோலிக்கபாடசாலைகளின் உதவிமுகாமைக்காரர் வண. ஜே. பிரான்சீஸ், வண. எல். ஆர். அன்ரனி, வண. பிரான்சிஸ் சேவியர் எனும்குருப்பிரசாதிகள் மூவரும் துக்கசங்கீதம்பாடிச்செல்ல, ஆசனக்கோவிலிலும், சேமக்காலையிலும்நடந்தேறிய அந்திமதிருச்சடங்குகளின் பின் மிகுந்தபிரலாபமத்தியில் நடைபெற்றது. மரிக்கும்போது இவருக்கு வயது27. இவருடையஆத்துமஇளைப்பாற்றிக்காக 25-1-57 வெள்ளிக்கிழமை ஆசனக்கோவிலிலே ஓர்துக்கப் பாடற்பூசைநிறைவேறியது. இவரை இழந்து துன்புறும் கணவருடனும், சகோதரியுடனும், மற்றும்இனசனருடனும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

**R. I. P.**

## ஆசிரிய பயிற்சிக்கலாசாலைப் பிரவேச வகுப்பு

இவ்வாண்டு நடைபெறவிருக்கும் தமிழ்ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைப் பிரவேசப்பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக மேற்படி வகுப்பொன்று நிகழும் 1957ஆம் ஆண்டு மாசிமாதம் 5ஆம்திகதி தொடக்கம் எமது தாபனத்தில் நடைபெறும். இவ்வகுப்பிற்சேர்ந்துபடிக்க விரும்பும் மாணவர்கள் (ஆண்கள்) எம்மிடம் ஒழுங்குசெய்துகொள்ளவும்.

**சுவாமி வ. தீயோகுப்பிள்ளை,**
தாபனத்தலைவர்.

சஞ்சூசையப்பர்தாபனம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

## மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**திருப்பாலர் சபைத்தினம் :—**
உலகமெங்கும் இருக்கும் உங்கள் சகோதரர்களோடு ஒன்றுகூடுங்கள். குழந்தையாம்யேசுவைச் சுற்றிவாருங்கள். 18-1-57வெள்ளிக்கிழமைகாலை தொடக்கம் ஒன்பதுநாட்களாகப் பாலர்வாரம் தாண்டன்வெளி, பரிசுத்தவியாகுலமாதா ஆலயத்தில் இப்பங்குக் கிறிஸ்துவபாலர்களால் பங்குக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமிகளின் தலைமையில்கொண்டாடப்பட்டது. ஆரம்பநாளிலிருந்து தினமுங்காலையில் திவ்வியபலிபூசைகண்டு திருவிருந்தருந்தியது பாலர்குழாம். மாலைஆராதனையிலும் பங்குபற்றித் தனதுஐக்கியத்தையும் காட்டியது. எல்லாஆராதனைகளிலும் பாலர்களே தேவதோத்திர கீதங்கள்பாடிச் செபங்களும்ஓதினார்கள்.

திருநாளாகிய 27-1-57ஞாயிற்றுக்கிழமை முதலாம்பூசைக்குப்பின் பாலகயேசுவின் திருச்சுரூபத்தை அலங்கரித்துப் பாலர்கள் தோத்திரகீதங்கள் பாடிச் செபங்கள்ஓதி, கையிற்கொடிகள்ஏந்திச் சுற்றுப்பிரகாரமாய் எடுத்துச்சென்றனர். இறுதியில் இரண்டாம்பூசை பங்குக்குரவரால் பாடற்பூசையாக நிறைவேறியது. பாலர்களுக்கென ஓர்விசேடபிரசங்கமும் பூசைவேளை அவரால் நிகழ்த்தப்பட்டது. பாலர்களே தோத்திரகீதங்கள் பாடினர். திரளாகத் திருவிருந்தருந்தித் தம்மைப்பாலகயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தனர். இவர்கள் தங்கள்சந்தாத்தொகையைக்கட்டித் தங்கள்செபங்களையும், பரித்தியாகங்களையும் உலகெங்கும் கைவிடப்பட்டு வறுமைப்பிணியால் வருந்தும் தங்கள்சகோதரர்களின் மீட்சிக்காகப் பாலகயேசுவிடம் ஒப்புக்கொடுத்தனர்.

— நிருபர்

● ஹங்கேரியிலே பிரித்தானிய தூதாலயத்தில் இருந்துவந்த இராணுவஆலோசகரான கர்னல் ஜேம்ஸ் கவரிஎன்பவரைக் ஹங்கேரியஅரசாங்கம் இருவாரங்களின்முன் வெளியேற்றிவிட்டது. இதற்குப்பதில் பிரித்தானியிலே ஹங்கேரிய தூதாலயத்தில் இருந்துவந்த இராணுவஆலோசகரான கர்னல் பெல்லா நாகிஎன்பவரைச் சென்றவாரம் பிரித்தானியஅரசாங்கம் 48 மணிநேரத்துள் வெளியேற்றிவிடலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

In the matter of the Last Will and Testament of the late Thavithu Sebatheyu of Karayoor in Jaffna.

Testamentary Jurisdiction } No. 253. Deceased.

Celina window of Thavithu Sethatheyu of Karayoor.

Petitioner.

Vs.

1. Samuel Canagasabai and
2. wife Margaret of St. Patrick's Road, Jaffna.
3. Sebatheyu Arulanantham of do
4. Damian James and
5. wife Mary Elizabeth of do
6. Sebatheyu Singarayar and
7. Anne Regina daughter of Sebatheyu of do.

Respondents.

This matter coming on for disposal before P. Sri Skantha Rajah Esquire, District Judge, Jaffan on the 7th day of December, 1956 in the presence of Mr. M. M. Sultan, Proctor on the part of the Petitioner and on reading the affidavit of the petition of the Petitioner having been read.

It is ordered that the Last Will and Testament of the abovenamed deceased be declared proved and the Petitioner be declared entitled to the Letters of Probate to the said Last Will and Testament and the same be granted to her as Executrix named in the Last Will of the deceased unless the Reespondents or any other person or persons interested in this matter shall appear before this Court on or before the 25th day of January 1957 and show cause to the satisfaction of this Court to the contrary.

This 7th day of December, 1956.

Sgd. P. SRI SKANTHA RAJAH
District Judge.

Drawn by:
Sgd: M. M. Sultan,
Proctor for Petitioner.

Time extended for 15-2.1957.
Intld: P. S.
D. J.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. கொக்குவில் சுப்பையா மயில்வாகனமும்,
2. ஷை பெண் ஞானரஞ்சுதமும்

வழக்காளிகள்.

இல. 11906.

எதிராக

சுதுமலை, ஆறுமுகம் பொன்னம்பலம்

எதிராளி.

யாழ்ப்பாணம், டிஸ்திறிக்கோட்டின் 11906-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகளும் 1957-ம் ஹூ பங்குனி மீ 9ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பூநகரிப்பகுதி மட்டுவில் நாடு "கணவாய்ப்பள்ளம்" 32ஏக்கர். இதில் நிந்தமாகக் கிழக்குப்பக்கமாக 24 ஏக்கர். அத்துடன் வங்களாவும், வீடும் கொட்டிலும், தரவும் பயிர்வகைகளும். எல்லை : கிழக்கு — மு. சிவபாதசுந்தரம் பெண் செல்வரத்தினத்துக்குரிய ஆதனம். வடக்கு — முடிக்குரியவாதனம். மேற்கு —வல்லிபுரம் சுப்பையாவுக்கு விலைப்பட்ட இக்காணியில் ஒருபகுதி. தெற்கு— ஆறுமுகம் தம்பையாவினுதனமும், மறுபேருக்குமுரியவாதனமும். இக்காணி G 28240-ம் இலக்கப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

2. ஷை மட்டுவில்நாடு இறை "I" என்னும் அட்சரமிட்ட PPA 1413என்ற துண்டுக்காணி ஏக்கர் 1, றூட் 1, பேட்சு 6.02-ம் இதற்கெல்லை : கிழக்கு—முடிக்குரியஆதனம். வடக்கு—பூநகரி சங்குப்பிட்டி றேட்டு. மேற்கு — முடிக்குரிய காணி. தெற்கு — மேற்சொல்லிய 2-ம் காணி. இக்காணி G 28/241-ம் புத்தகத்திலே பதியப்பட்டிருக்கின்றது.

இக்காணிகளைப்பற்றி ஏதாகுதல் விபரம்அறிகிறதாயிருந்தால் பிறக்றர் க. செ. சோமசேகரம் அவர்களிடம் அறிந்து கொள்ளலாம்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
29-1-57

## இலகுபோத தமிழ்நெடுங்கணக்கு

ஒலிவடிவால் இனிமையும், வரிவடிவால் நீர்மையும்பூண்ட தமிழ்மொழி எழுத்துக்களைப் பிறமொழியாளரும் மிகஇலகுவில் படித்தறியவேண்டும் என்னும் அவாத்தூண்ட இவ் "அரிச்சுவடியை" வெளியிடநினைந்தேன்.

இதில் அட்சரங்களின்ஒலி ஒப்புமை வேற்றுமைநோக்கி அவற்றை வகுத்தும், வர்ணமையால் விளக்கியும் இருப்பதால் இதனைப் பாடசாலைச்சிறுவரும் இலகுவில் விளங்கிப் படித்துப் பயன் அடைவர்என் பதுஎன்நம்பிக்கையாகும்.

பிரசுராலயம் : S. J. C. Press. ஆக்கியோன்: M. J. S.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய கிருபையாலும், எங்கள்தஞ்சமும், அடைக்கலமுமாகிய சதாசகாயமாதாவின் இரக்கமுள்ள சகாயத்தினலும், இன்னும் அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்ருட்டினுலும் எங்கள்மகள் பரீட்சையில் சித்திபெற்று மேற்படிப்புக்குப்போக அருள்புரிந்ததற்காகவும், பெற்றுக்கொண்ட மற்றும் பலநன்மைகளுக்கு நன்றியறிதலாகவும் இதைப்பிரசுரிக்கின்ருேம். எங்கள் ஏனையமன்ருட்டுகளுக்கும் கிருபைபுரிவார்களாக. இவர்களின் பரிசுத்தநாமம் எல்லோராலும் எங்கும் புகழப்படக்கடவதாக.

மட்டக்களப்பு P. S.

### கார்களைக் கைப்பற்றமுடியாது

தமிழ்எழுத்துகள் பொறிக்கப்பட்ட இலக்கத்தகடுகளைக்கொண்ட மோட்டார்தங்களைக் கைப்பற்றவோ, அன்றேல் தடுத்துவைக்கவோ தற்போதுள்ள மோட்டார்ப்போக்குவரத்துச் சட்டப்படி அரசாங்கத்துக்குஉரிமையில்லை ; தமிழ்எழுத்துக்களைக்கொண்ட மோட்டார்தங்களைக் கைப்பற்றவோ, அன்றேல்தடுத்துவைக்கவோ அரசாங்கம்விரும்பினுல் மோட்டார்போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தஞ்செய்ய வேண்டிவரும்; அன்றேல் அவசரகால நிலைமையை அரசாங்கம் பிரகடனஞ்செய்து நாட்டின்நிர்வாகத்தைக் கவர்னர்—ஜெனறலிடம் ஒப்படைக்கவேண்டிவரும் ; அவ்வாறுஒப்படைத்தால் பாராளுமன்றத்தின் உதவியில்லாமலே கவர்னர்—ஜெனறல் சட்டத்தைஇயற்றலாம்என்று தமிரசுக்கட்சித் தலைவர்களில்ஒருவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்அவர்கள் தெரிவித்திருக்கின்ருர்.

## தலைவில் — பங்குனித் திருநாள் 7-3-57 — 10-3-57

பங்குனி 3 : கொடியேற்றம். ஒவ்வொரு இரவும் 6-30 நோவினை.
பங்குனி 6 : பின்னேரம் 6-30 பொண்ரிவிக்கல் வெஸ்பேர்ஸ்.
பங்குனி 7 : ாலை 7-30 பாடற்பூசை.
பங்குனி 9 : பின்னேரம் 6-30 பொண்ரிவிக்கல் வெஸ்பேர்ஸ்.
பங்குனி 10 : காலை 7-30 பாடற்பூசை.

வாடிவீடுகள் உண்டு. தேவைப்பட்டவர்கள் நேரத்தோடு எழுதுங்கள். வீட்டு வாடகையோ, கடைவாடகையோ 20-2-57-க்கு முன்பதாகக் கட்டப்படவேண்டும்.

மரக்கறி, குளிர்ந்தபானக்கடைகள் தவிர, மற்றஎல்லாக்கடைகளும் ஆராதனை வேளைகளில் மூடப்படவேண்டும்.

கார்கள்விடக் கொட்டில்கள் உண்டு. 10-2-57-க்குமுன் விண்ணப்பிக்கவும்.

அதிவண. ஏ. எம். பர்நாந்து சுவாமியார்,
(பரிபாலகர்)

சந்தானுள்திருப்பதி, தலைவில்,
20-1-57.


## G. C. E. பரீட்சைகளுக்கு

1. உயர்தர எண்கணிதம்
சிவக்கொழுந்து மஹாதேவன்
ஒப்புயர்வற்ற சிறந்தநூல்—ரூபா 4-00

2. உலக பூமிசாஸ்திர விளக்கம்
சிவக்கொழுந்து
இருபாகங்களுமடங்கிய முழுத்தொகுதி—ரூபா 7-75

3. உயர்தர அக்ஷரகணிதம்
விரைவில் வெளிவரும்—ரூபா 4-50

சகாய விலைவிபரங்கட்கு எழுதுக :

மனேஜர்,
வடலங்கா புத்தகசாலை—பருத்தித்துறை


### முதல்வருட மரணஞாபகம்

எமதுநேசத்தாயாரான வ. மரியமதலேனம்அவர்கள் இவ்வுலகைவிட்டுப் பிரிந்த முதல்வருட நிறைவு தினம் 4-2-57-இல் பூர்த்தியாகிறது. அன்று காலை 7மணிக்கு வல்வைநகர் அர்ச். செபஸ்தியார்ஆலயத்தில் துக்கப்பாடற்பூசை நடந்தேறும். இதனைக்கண்ணுறும் அன்பர்கள்எல்லோரும் இவவுக்கு நித்தியஇளைப்பாற்றியைத் தேவன் அருளுமாறு மன்றுடும்படி வேண்டுகிறேம்.

இவவின்பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### 12-ம் வருட மரண ஞாபகம்

பிறப்பு : 2—2—83 இறப்பு : 2—2—45

மட்டக்களப்பு, கல்லடி முகத்துவாரத்தில் குடிகொண்டு எழுந்தருளியிருக்கும் அர்ச். இஞ்ஞாசியார் கோவிற் பங்கைச் சேர்ந்தவரும், உண்மையான கத்தோலிக்கருமாய்இருந்தவருமான திரு. கா. மரியான்தம்பிஅவர்கள் தமது 62-வது வயதில் (2-2-1945) மரித்துத் தமதுஆன்மாவைப் பரமபிதாவின் கையில்ஒப்புக்கொடுத்து 12-ம் வருடம் பூர்த்தியாகிறபடியால் இதைக்கவனிக்கும் சகலகிறீஸ்தவர்களும் அவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேம்.

மகன்—ம. சுவக்கீன்
மருமகள்—க. அன்னம்மா
பேரப்பிள்ளைகள்—
சு. இருதயமேரி
சு. லூர்துமேரி
சு. பெனடிக்ற்

14/1 சூரியலேன்,
மட்டக்களப்பு.

● பண்டிதநேரு அவர்கள் லோக சபைத்தேர்தலிலே உத்தரபிரதேசத்தைச்சேர்ந்த அலகபாத்பகுதியிலுள்ள இரட்டை அங்கத்தினர் தொகுதியில் போட்டியிட விருக்கின்ருர். அதே தொகுதியைச்சேர்ந்த ஒதுக்கப்பட்டவர்கள்ஸ்தானத்திற்குத் திரு. மசூதியாதின்என்பவர் போட்டியிடுவார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 31-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித வீரர்



## புதுக்குருமகனே வருக!

[சகோ. தேவராஜ் ஆண்டுபலவாய் ஆசையாய்க்காத்திருந்த அருந்தினம் இதோவருகிறது. குருத்தொண்டு புரிவார்தொகை அருகிவருவதையிட்டு வாடி நாவெழாதிருந்த மேற்றிராசன ஆலயமணிகள் புதுக்குரவர் வருவதையிட்டுப் புளகாங்கிதமடைந்து வரவுகூறுகின்றன. ஆலயமணிகளின் ஆர்ப்பரிப்பில் யாழ்ப்பாண உத்தியானம் பேருவகை கொள்ளும்]

அம்புயப்பொன் முகையவிழ்க்கு மருணன்போலும்
அல்லிமுக மலரவரு நிலவைப்போலும்
இம்பரிடை ஞானவொளி கான்றுன்மக்கள்
இதயமல ரொளிநிறைந்து விளங்கவென்று.
உம்பருல காள்பரனர் கருணைச்செல்வம்
ஓங்கியுல கின்பசுக முதறித்தள்ளிச்
செம்பவளக் கரந்தூக்கி ஆசீர்தேக்கச்
செனித்தபுதுக் குருமகனே! வாராய்! வாராய்!!

o

ஈரறத்தின் பேரறமாந் துறவைத்தாங்கி
இருளிலொளிச் சுடர்முகிழ்த்த வாருய்ப்பாவக்
கோரவிருள் கடிந்தருளைப் பொழிந்துபூவிற்
குணம்பரக்க நலஞ்சிறக்க அன்புங்கூரச்
சீரிலகு திருமறையிற் பலருஞ்சேரச்
செயலாற்று முளங்கொண்ட செல்வா! எங்கள்
ஆரமுதே! ஊருணியே! ஞானத்தேவே!
ஆயர்குலத் திருமணியே! வாராய்! வாராய்!!

o

குருத்துவத்தின் மகத்துவத்தை எடுத்துக்காட்டிக்
குடும்பமெலா மொருகனியைப் பரனுக்கியத்
தரித்திரத்தி னுருவாகித் தவக்கோலேந்தித்
தாரணியை ரட்சித்துப் பரிபாலிக்கத்
திருப்பலியை நிறைவேற்றித் தினமுந்தேவ
திருச்சுதனைக் கரத்தேந்தும் பாக்யம்பெற்றுய்!
மருத்துவனு யெம்மனத்தின் பிணியைத்தீர்க்க
மாணிக்க மறைவிளக்கே! வாராய்! வாராய்!! — "ஜெயம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமைச் சகோதரங்களே !

அடுத்துவரும் மாசிமாதம் 4-ந் திகதி நடக்கவிருக்கும் விசேஷமென்னவென்று உங்களுக்குத் தெரியுமா ? .... உங்கள் கண்கள் அறிவினால் ஒளிவீசுகின்றன .... சகோ. தேவராஜ் அவர்களுக்குக் குருப்பட்ட அபிஷேகம்.

சென்றமார்கழியில் எமது ஆயர் விடுத்தநிருபத்தில் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தது உங்களுக்கு நினைவிருக்கும். எமது அழைத்தல்வருடத்துக்கு இதுவோர் முடிசூட்டியதுபோலிருக்கும்.

குருப்பட்டத்திற்குக் கிட்டிய ஞான ஆயத்தஞ்செய்துகொண் டிருக்கும் சங். சகோதரர் உத்தம தேவதொண்டராய் விளங்குவதற்குத் தேவையான ஞான வரங்களைத் தேவன்நிறைவாக அவருக்குக் கொடுக்கவேண்டுமென்று விசேஷமாய்ச் செபியுங்கள்.

நீங்களும் குருத்துவதொண்டைப்பற்றி நினைத்துக்கொண் டிருக்கிறீர்கள் அல்லவா ? குருப்பட்டச் சடங்குகளைக் காணும்பொழுது அந்தஎண்ணம் மேலும் வலுப்பெறும். மேற்றிராணியாண்டவரும் இதைப்பற்றி உங்களுக்குக்கூறியதை நினைவூட்டுகிறேன். உங்களில் அநேகர் குருப்பட்டச்சடங்குகளுக்குச் சமுகமளிப்பீர்களென எதிர்பார்க்கிறேன்.

வீரஆவேசத்துடன் கிறீஸ்துவின் இராச்சியத்தைப் பரப்ப ஓர் சம்பாவிலு வேண்டும். கல்லையும், மணலையும்பாராமல் அல்லும்பகலும் அலைந்து திரிந்து ஆயிரமாயிரவரை மனந்திருப்ப ஓர்சவேரியார் வேண்டும். கலாபனைவேளைகளில் மறைந்துநின்று கிறீஸ்துவர்களுக்குத் திடமளிக்க ஓர் யோசேவாஸ் முனிவர் வேண்டும். வேதத்தைவிளக்கி நூல்கள் எழுதி மனவருட்சி உண்டாக்க ஓர் யக்கோமே கொன்சால்வெஸ் வேண்டும்.

ஆகையால் அழைத்தல் ஆண்டின் இறுதிநாட்களில் ஆசையாய் மன்றாடுங்கள். சுபம் !

அண்ணா

# குருமணி வாழ்க !

[ மாசிமாதம் 4-ந்திகதி யாழ்ப்பாண மேற்றிராசன ஆலயத்தில் சகோ. பெனடிக்ற் தேவராஜ் அவர்களுக்கு மகாமேன்மைதங்கிய மேற்றிராணியாண்டவர் குருப்பட்டம் எனும் திருப்பட்டம் அருளுவார்.

குருத்துவத்தின் மாண்பையும், குருத்தொண்டின் இலட்சியத்தையும்பற்றி மணிக்கோவையெனக் கவிதைபுனைந்து தந்திருக்கிறார் "சாந்தினி" ]

மண்ணையும் பொன்னையும் நீக்கினார் — தூய
மனமலர் தேவனுக் காக்கினார்
தண்ணளித் தேனையுந் தேக்கினார் — அன்புத்
தலைவரெங் குருமணி வாழ்கவே !

●

சத்தியம் புவியினில் ஓங்கவே — வேத
சாட்சிகள் நம்மிடைத் தேங்கவே
முத்தி நெறிக்கொடி தாங்கினார் — ஞான
மூர்த்தியெங் குருமுதல் வாழ்கவே !

●

மன்னரும் போற்றிடுங் குருமகன் — நம்
மாமணித் தாயகத் திருமகன்
இன்னிசைத் தேன்மொழித் தமிழென — நல்
இசையுடன் நீடுழி வாழ்கவே !


— "சாந்தினி"



ஒவ்வொரு குருத்துவ மாணவனும்படிக்கிறான். ஆயினும், வரப்போகும் ஒருவிசேஷ தினத்தை — தனது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவைப் பலிபீடத்தில் எழுந்தருளச் செய்யும் தினத்தையும் பற்றிக் கனவுகாணுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளைகள் அப்பங்கேட்கிறார்கள்; அதை அவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்க ஒருவருமில்லை. யார்முன்வருவார்?

## எவ்விதமும் ஒரு குரு

சிறுவனாயிருந்த காலந்தொடங்கியே டொன் யோண் போஸ்கோ படிப்பில் ஆர்வங்கொண்டிருந்தார். அதிகநேரம் படிப்பதற்காகச் சகபாடிகளுடன் விளையாடவும் மறுத்து விடுவார். அவருடையதோழர்கள் இதைக்கண்டுசினங்கொண்டு அவருடன் அடிபட்டதும் உண்டு.

அவர்களுடன் நியாயம்பேசாமலும், தான்செய்வது சரியென்று நிருபியாமலும், அவர்கள் எவ்வளவுதான் அடித்துத் தொந்தரவு செய்தபோதிலும் தான் ஓர் குருஆவது நிச்சயம்என்று சொல்லுவார்.

அதன்பின் அவர்கள் போஸ்கோவை இன்னும்பரிகாசஞ்செய்து "சாமியார்! தோத்திரம்" என்று கேலிபண்ணுவார்கள்.

அதைப் போஸ்கோ பரவாய்பண்ணவில்லை; "ஆமாம்; நான் ஒரு குரு ஆவேன்; நீங்கள் எல்லாம் என்னிடம் பாவசங்கீர்த்தனத்துக்கு வருவீர்கள்" என்று தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார்.

அவருடைய பேச்சையும், படிப்பில் அவர்காட்டிய ஊக்கத்தையுங் கண்ட சிறுதோழர்கள் அப்படி நடக்கக்கூடுமென்று எண்ணினர். அதிலிருந்து அவருடைய படிப்புக்கோ, செபத்துக்கோ அவர்கள் இடையூறாயிருக்கவில்லை. அவர்படிப்பதை அல்லது செபிப்பதைக் கண்டால் தூரவிலகிப் போய், எல்லாம்முடிந்தது என்று கண்டபின் தான் அவரைத் தங்களுடன் விளையாட அழைப்பார்கள்.

யோண் அவர்களுக்குச் சிறுகதைகள் செரல்லியும், பாட்டுக்கள்படித்தும் உல்லாசமாய்ப் பொழுதுபோக்குவார்.

அவர் குருப்பிரசாதியான பின்பு, அவர் பெக்கியிலோ காஸ்ரல்நுவோவோவிலோ, தூறினிலோ இருந்தாலும் அவர்கள் அவரிடம் பாவசங்கீர்த்தனத்துக்குப் போவார்கள். தங்களுடைய பழைய குறும்புகளையும் நினைத்துப் பலவாறாகச் சிரிப்பார்கள்.

(டொன் போஸ்கோவின் திருநாள் தை மாதம் 31-ந் திகதி. எம்மிடையேயும் இவரைப்போன்ற குருக்கள் பலரைத் தரவேண்டுமென்று திருஇருதய யேசுவையும், அவர் தாயாரையும் கேளுங்கள்)

## யுத்தமே!

நீ உன் கோரப்பற்களுக்கிடையே உலகைவைத்து நசுக்கப்பார்க்கிறாய். நீ உலகிற் தோன்றுவதற்குப் பற்பல பிரச்சினைகளைக் கிழப்பிவிடுகிறாய். சமீபத்தில் 'சுயெஸ்கால்வாய்'ப் பிரச்சினையை உண்டுபண்ணினாய். உன்னை உலகிற் தோன்றவிடாது தடுப்பதற்காகச் 'சமாதானப் பிரியர்கள்' பெரிதும் முயற்சிசெய்துவருகிறார்கள். உன் பிறப்பிடமாகிய பிரச்சினைகள் தீர்ப்பதற்காகவே ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் (யு. என். ஓ.) போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பண்டைக் காலத்தில் நீ பற்பலபெயர்களில் தோன்றியுள்ளாய். அவ்வப்போது நீ புரிந்த கொடிய செயல்களை இன்றும் சரித்திரஏடுகள் கூறுகின்றன. சரித்திரத்தில் நீ முக்கியபாகங்களை எடுத்துக் கொண்டாய்என்று கூறலாம். கோடிக்கணக்கான மக்களின் உயிரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்தாய்; பலரின் அங்கங்களைப் பறித்தாய். சீரும், சிறப்பும் பெற்றுவிளங்கிய எத்தனையோ நகரங்கள் உன்னால் சிதைவுற்றன. சிற்பிகள் செதுக்கிய சிலைகள், கோபுரங்கள், கலைக்கூடமெனத் திகழ்ந்த பட்டினங்கள் இருந்தஇடமே தெரியாமல் மறைந்தன. ஜப்பானில் 'ஹிரோஷிமாவை'யும் அழித்தது நீயல்லவா?

காலத்துக்குக்காலம் உன் ஆட்சிக்குத் தகுந்தவாறு பயங்கர ஆயுதங்களைக் கண்டுபிடிக்கச் செய்தாய். 'அணுக்குண்டு', 'ஹட்டஜன்குண்டு', பல்லாயிரம் மைல்கள் சென்று தாக்கக்கூடிய 'கைடெட் மிசைல்ஸ்' இத்தியாதி ஆயுதங்கள் இன்னும் பல. இவை மாத்திரமல்ல, நீ உலகிற் தோன்றியவுடன் போக்குவரத்துச் சாதனங்களெல்லாம் தடைபட்டுப் பொருட்களின் விலையும் அதிகரிக்கின்றன. உன் உதவியால் ஸ்ரீமான் 'பிளாக்மார்க்கட்' அவர்கள் தன் அதிகாரத்தைச் செலுத்த ஆரம்பித்து விடுகிறார். "உலகமக்கள் அனைவரும் ஒருபிதாவின் பிள்ளைகள்" என்ற உண்மையை மறைத்து அவர்களைப் பகைவர்களாக்கி விடுகின்றாய்.

இத்தனை கொடுமைகளைக் கண்முன் கண்டும் ஏனோசிலர் இன்னும் உன்னை வரவேற்பதற்கு ஆயத்தமாய் இருக்கிறார்கள். இந்த 'யுத்தப்பிரியர்கள்' எல்லாம், 'சமாதானப் பிரியர்க'ளாக மாற வேண்டும். அப்பொழுதே உனக்குச் சாமணி அடித்து, உண்மைச் சமாதானத்தை நிலவச்செய்ய முடியும்.

உரும்பராய் வே. சாமுவேல்.

## இவர் யார் தெரியுமா?

ஒருசிறு ஸ்பானியபையன் தன்னால் கூடியமட்டும் கல்விபயின்றும் பயனற்றதாகத் தோன்றியதால் மனந்தளர்ந்து பாடசாலையை விட்டுக் காட்டிற்கு ஓடினான். பல இடங்களிலும் திரிந்தான். வெயிலின் அகோரத்தால் களைத்து ஓர் நீரோடையின் பக்கமாக நிழலில் படுத்திருந்தான். அருகில் அந்த நீரோடையில் ஓர்சிறு நீர்வீழ்ச்சி இருந்தது. சிறிது தூரத்திலிருந்து நீர் விழுவதைக் கவனித்தான். விழும் இடத்தில் இருந்த கற்பாறையின் [illegible]யையும் நோக்கினன். இப்படி இச்சொற்ப நீர் இடைவிடாமல் விழுந்ததினால் அல்லவா, இக் கற்பாறையையும் தேய்த்துக் குழி உண்டாக்கியது. அதுபோலவே நானும் இடைவிடாமல் படித்தால் படிப்பாளி ஆவது நிச்சயம்என்று சிந்தித்தான். அப்படியே திரும்பிக் கலாசாலை சென்றான் கல்விகற்றுத் தேர்ந்தான். இவர்தான் பெரிய அர்ச்சியசிட்டரும், வேத பாரகராகச் திருச்சபையால் கொண்டா[illegible]ப் பெறுகிறவருமான அர்ச். செவில் இசிதோர். ஆகையால், சிறுவர், சிறுமிகளாகிய நாங்களும் விடாமுயற்சியுடன் படித்தால் வெற்றியடைவோம்.

"முயற்சி உயர்ச்சிதரும்",
"ஊக்கமது கைவிடேல்"

## வேண்டும்

அன்பு வேண்டும் இறைவனில்
ஆசை வேண்டும் தமிழினில்
இரக்கம் வேண்டும் ஏழையில்
ஈகை வேண்டும் பொருளினில்
உண்மை வேண்டும் உரையினில்
ஊக்கம் வேண்டும் முயற்சியில்
எளிமை வேண்டும் வாழ்வினில்
ஏற்றம் வேண்டும் கல்வியில்
ஐக்கியம் வேண்டும் உலகினில்
ஒழுக்கம் வேண்டும் நடையினில்
ஓய்வு வேண்டும் முதுமையில்
ஔடதம் வேண்டும் பிணியினில்

குறிப்பு: தம்பி, தங்கைமாரிடமிருந்து கவர்ச்சியான தமிழ்நடையில் ஏராளமான விஷயதானங்களை எதிர்பார்க்கிறேன். அவைகளை "அண்ணு", சஞ்சூசையப்பர் அச்சகம் பெரியதெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org